# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 15.02.2022 supeedsam.com supeedsam@gmail.com







# தவறுகளும் பிழைகளும் மலிந்த உயர்தர உயிரியல் பரீட்சை வினாத்தாள்!

## முன்னாள் மேலதிக பிரதம பரீட்சகர் ரூபசிங்கம் குற்றச்சாட்டு

(காரைதீவு சகா)

இம்முறை நடைபெற்ற க.பொ.த.பரீட்சையின் உயிரியல்பாட வினாத்தாள் ஒன்றில் தவறுகளும் ,பிழைகளும் மலிந்திருப்பதாக முன்னாள் மேலதிக பிரதம பரீட்சகர் செ.ருபசிங்கம் குற்றம்சாட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உயிரியல்பாட பிரபல ஆசிரியரும், முன்னாள் மேலதிக பிரதம பரீட்சகருமான ரூபசிங்கம் குறிப்பிடுகையில்:

02 ஆம் பக்கத்தில்...

## சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீது தாக்குதல்



(காந்தன்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது, அடையாளம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதல் சம்பவம் நேற்று (14) அதிகாலை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ளது.

பிலியந்தலை கெம்பீரிஜ் கோர்ட் வீட்டுத் திட்டத்திலுள்ள சமுதித்தவின் வீட்டின் மீது, நான்கு பேரை கொண்ட அடையாளம்

02 ஆம் பக்கத்தில்...

## இன்று கொழும்பிலும் கையெழுத்து போராட்டம்

(ஊர்காவலன்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் கையெழுத்து திட்டும் நடவடிக்கை இன்று கொழும்பிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, கோட்டை புகையிரத்திற்கு நிலையத்துக்கு முன்பாக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர்

02 ஆம் பக்கத்தில்...

## மோடிக்கு இலங்கை அரசு அழைப்பு!



அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## விடுதலை புலிகளுக்கும் ஜே.வி.பி.யும் ஒன்றே



(காந்தன்)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பிற்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் ஏதும் கிடையாது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்த பகுதியில் இடம்பெற்ற ஆளும் கட்சி தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் பேசிய அவர், இருதரப்பினரும் அழிவை முன்னிலைப்படுத்தி செயற்பட்டார்கள் என கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...



அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை மீண்டும் பெய்து வருவதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் உலரவிடுவதனால் போக்குவரத்து சீர்கேடு ஏற்பட்டுள்ளதை காணலாம்.

## இலங்கை வரும் இந்திய பிரதமர் மோடியை சந்திக்க கூட்டமைப்பு விருப்பம்




இந்திய பிரதமர் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தால் அவரைச் சந்தித்துப் பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தால், இந்திய மீனவர்கள் கடல் எல்லையை அத்துமீறிச் செல்லும் பிரச்சினைகள் மற்றும் அதனால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாட வாய்ப்பாக அமையும் என வும் சம்பந்தன் கூறினார்.

இதேவேளை, 13-ஐ முழுமையாக அமுல்படுத்தி,

02 ஆம் பக்கத்தில்...

## சிவில் செயற்பாட்டாளர் புலனாய்வு அதிகாரிகளினால் கைது!



சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக்க கமகே குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஊடக சந்திப்பொன்றை நடத்தி, தனது நிலைப்பாட்டை வெளியிட்ட குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## நிலைமை மிக மோசமாகிவிட்டது, ஆட்சி மாற்றமே உடனடி தேவை



இலங்கையின் இன்றைய நிலைமை மிகவும் மோசமான கட்டத்தில் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

மக்கள் அனைவரும் பொறுமை இழந்துள்ளனர் எனவும், நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்று தன்னால் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஆட்சியால் நாடு சீரழிந்துள்ளது என்றும் நாடு மீண்டு எழ முடியாத நிலையில் நாட்டின் பொருளாதாரம் அதாள

02 ஆம் பக்கத்தில்...















# குமுக்கனில் காளியம்மனுக்கு விஷேட அபிஷேகம்!

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் தென் கோடியில் உள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் ஆலயத்துக்கு அருகே அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட காளியம்பாள் விக்கிரகத்துக்கு நேற்றைய தினம் அபிஷேகம் நடத்தப்பட்டது. விக்கிரகத்தை நிறுவிய ஸ்ரீ சிவசங்கர் ஜீ தலைமையிலான குழு இந்த அபிஷேகத்தை நேற்று நடத்தியது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை மேற்கொண்டமைக்காக விளக்கமறியலில் இருந்து நிபந்தனையுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்ட கிரானைச் சேர்ந்தவர் மாரடைப்பு காரணமாக உயிரிழப்பு

(ருத்திரன்)

மே 18. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை மேற்கொண்டமைக்காக விளக்கமறியலில் இருந்து நிபந்தனையுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்ட கிரானைச் சேர்ந்த குருசுமுத்து விமலசேன(வள்ளிபுனம்) வயது (68) மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

எதிர்வரும் 02.03.2022 ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸ் நிலையம் சென்று தமது வழமையான கையொப்பதினை இட இருந்த நிலையில் அவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை (13) உயிழந்தவரின் இறுதிக் கிரியைகள் அன்னரின் இல்லத்தில் நடைபெற்று நேற்று (14) காலை கிரான் கிறிஸ்த்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.கடந்த மே 18.2021ல் மட்டக்களப்பு கிரான் நாகவத்தையில் உள்ள கடற்கரை காணியொன்றில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை மேற்கொண்டமைக்காக இவரது மகன் உட்பட 10 பேர்கள் கல்குடா பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளைப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.பின்னர் இவர்களது விடுதலை கோரி பொது அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட கடும் முயற்சியின் காரணமாக கடந்த 08.12.2022 ஆம் திகதி விடுதலை பெற்றனர். இவர் சுடரேற்றி தமிழ் தேசியத்திற்காக பயணித்தமைக்காக பல்வேறு பொது அமைப்புக்கள் தங்களது கண்ணீர் அஞ்சலியினை தியாகி குருசுமுத்து விமசேனவிற்கு தெரிவித்து வருகின்றனர்.



# தவறுகளும் பிழைகளும் மலிந்த உயர்தர உயிரியல் பரீட்சை வினாத்தாள்!

இத்தகைய தவறுகள் மிகநுட்பமானவை. மாணவர்களது பெறுபேற்றைப் பாதிப்பவை. மயக்கமான நிலையை உண்டுபண்ணுபவை. இவ்வாறான தவறுகள் அண்மைக் காலங்களில் அதிகரித்த வண்ணமுள்ளன. குறிப்பாக 2019 ,2020 வினாத்தாள்களில் நூற்றுக்கணக்கான பிழைகள் காணப்பட்டன. சம்பந்தப்பட்டவர்களுக்கு இது தொடர்பாக பலசந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப் பட்டபோதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.என்றார்.

அவரது அறிக்கை தெரிவிப்பதாவது:

கடந்த 07.02.2022 அன்று நடைபெற்ற உயிரியல் வினாத்தாள் 1 இல் வழமைபோல பல தவறுகளும் பிழைகளும் காணப்படுகின்றன.

அவற்றுள் சில வருமாறு.

2 வது வினாவில் பிரதானமாக(mainly) என்பதற்குப் பதிலாக முக்கியமாக எனவும், 5 வது வினாவில் விளைதிறனானது (effective) என்பதற்குப் பதிலாக வினைத்திறனானது( efficient) எனவும், %வது வினாவில் பெறப்பட்ட என்பதற்குப் பதிலாக பெற்ற எனவும் ,கடத்தப்படுகின்றன(passed) என்பதற்குப் பதிலாக ஊடுகடத்தப்படுகின்றன (transkms-sion) எனவும், மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதற்குப் பதிலாக மாற்றம் ஏற்படுகின்றது எனவும், 9வது வினாவில் கொம்புருத் தாவரங்கள் என்பதற்குப் பதிலாக கொம்புத் தாவரங்கள் எனவும், 12வது வினாவில் முதிர்ச்சியின்போது என்பதற்குப் பதிலாக முதிர்ச்சிப் பருவத்தில் எனவும், 13 வது வினாவிலும் 39 வது வினாவிலும் வினைத்திறனாக என்பதற்குப் பதிலாக திறமையாக எனவும், கொடுக்கப்பட்டிருந்தன.

13வது வினாவில் திசைகோட் சேர்க்கை என்பதற்குப் பதிலாக திசைமுகப்படுத்தல் எனவும் ,16வது வினாவில் ஒளித்தொகுப்புச் செய் யும் என்பதற்குப் பதிலாக ஒளித்தொகுப்பி எனவும், 1%வது வினாவில் விடுவிக்கத் துண்டப்படும் என்ப தற்குப் பதிலாகத் தூண்டப்படும் எனவும், 18வது வினாவில் அமைவிடம் என்பதற்குப் பதிலாக இருக்கும் இடம் எனவும் ,21வது வினாவிலும் 44வது வினாவிலும் சமிக்ஞை என்பதற்குப் பதிலாக சைகை எனவும், கொடுக்கப்பட்டிருந்தன.

22வது வினாவில் இயற்கையாகக் கொல்லும் என்பதற்குப் பதிலாக இயற்கைக் கொல்லும் எனத் தரப்பட்டுள்ளது. 24 வது வினாவில் பார்வைப் புலன்பரப்பு எனபதற்குப் பதிலாக கட்புலப் புலன்பரப்பு எனவும் ,31 வது வினாவில் தேவையானவையாகும் என்பது போதியனவாகும் எனவும், 40வது வினாவில் படுக்கை என்பது படுகை எனவும், வந்துள்ளது.

44 வது வினாவில் சுரப்பிகளை என்பது சுரப்பிகளையும் எனவும் 4%வது வினாவில் தலைகீழாகக் காணப்படலாம் என்பது தலைகீழாக்கப்படலாம் எனவும், 48 வது வினாவில் தத்திகளினுள்ளும் தாவரங்களினுள்ளும் என்பது தத்திகளிலும் தாவரங்களிலும் எனவும் தரப்பட்டுள்ளன.

வினா இல 20 இல் ஆங்கில. சிங்கள மொழி மூலங்களில் பயன்படுத்தப்பட்ட சோணையறை என்ற ஒரு சொல்லுக்குப் பதிலாக சோணையறை கூடம் என்ற இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதுபோன்ற இன்னும் பல பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. இவை சில உதாரணங்கள் மட்டுமே. மேற்படி தவறுகள் மிகநுட்பமானவை. மாணவர்களது பெறுபேற்றைப் பாதிப்பவை. மயக்கமான நிலையை உண்டுபண்ணுபவை. முக்கியம் .பிரதானம்: வினைத்திறன் விளைதிறன்: கடத்தல். ஊடுகடத்தல்: உள்ள கொண்ட: முதிர்ச்சியின்போது முதிர்ச்சிப் பருவத்தில் திசைமுகப்படுத்தல். திசைகோட்சேர்க்கை: திறமையாக வினைத்திறனாக: அமைவிடம் இருக்கும் இடம்: சமிக்ஞை. சைகை : கட்புல. பார்வை : போதிய. தேவை போன்ற சொற்கள் ஒத்த சொற்களல்ல. வெவ்வேறு பொருள் கொண்டவை. வெவ்வேறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுபவை.

இவை தவிர, வேறு இலக்கணப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் காணப் படுகின்றன. உதாரணமாக படுக்கை என்பது படுகை என வந்தமை எழுத்துப் பிழையாகும். பாடத்துடன் தொடர்பான நிபுணத்துவங் கொண்ட மொழிபெயர்ப்பாளர்களால் மொழிமாற்றம் செய்யப்படும் போதும் அக்கறையுடனும் , சமூகநீதியிலான பொறுப்புணர்வுடனும் வினாத்தாள்கள் செம்மை பார்க்கப்படும் போதும் அச்சுப்படி திருத்தப்படும் போதும் இத்தகைய தவறுகள் எழ நியாயமில்லை.




# நிலைமை மிக மோசமாகிவிட்டது, ஆட்சி

பாதாளத்தில் சென்றுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆட்சி மாற்றமே தற்போதைய உடனடித் தேவை என குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்க, ஜனநாயகத்தை நேசிக்கும் பிரதிநிதிகள் ஓரணியில் திரள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். அவ்வாறு இணையாவிட்டால் உலக வரைபடத்தில் இலங்கை இல்லாமல் போகும் நிலைமைதான் ஏற்படும் என்றும் சந்திரிகா குமாரதுங்க எச்சரித்தார்.

# இலங்கை வரும் இந்திய பிரதமர் மோடியை

நிரந்தரத் தீர்வு நோக்கி நகர இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து அனுப்பிய கூட்டு ஆவணத்துக்கான எழுத்துமூல பதிலை மோடியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை எனவும் அவா் கூறினார்.

அதற்கான பதிலை மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்குச் செயலில் காட்டும் என்று நாம் நம்புவதாகவும் அவா் குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தயாரித்த கூட்டு ஆவணம் அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்டது. இந்த ஆவணத்துக்கான பதில் மோடி தரப்பிடமிருந்து வந்ததா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவா் இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டை அந்தக் கூட்டு ஆவணத்தில் நாம் பிரதிபலித்துள்ளோம். தமிழ்பேசும் மக்களின் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு ஆழ்ந்த கரிசனை எடுத்து இலங்கை அரசுக்கு சில விடயங்களைச் செயலில் புரியவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே அந்த ஆவணத்தை நாம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளோம் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# விடுதலை புலிகளுக்கும் ஜே.வி.பி.யும் ஒன்றே

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது என கூறினார்.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் அனைத்து செயற்திட்டங்களையும் விமர்சிப்பது எதிர்க்கட்சியின் பிரதான அரசியல் கொள்கை என நாமல் ராஜபக்ஷ சாடினார்.

இந்த விடயத்தில் தமிழீழ விடுதலை புலிகளுக்கும்,மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் ஏதும் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். ஆரம்பகாலத்தில் மக்கள் விடுதலை முன்னணி பாரிய கலவரங்களில் ஈடுப்பட்டமையினால் பல இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டதை மக்கள் இன்றும் மறக்கவில்லை என தெரிவித்தார்

# மோடிக்கு இலங்கை அரசு அழைப்பு!

மார்ச் 31 அன்று நடைபெறும் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இது குறித்து கடந்த டிசம்பரில் இந்தியாவிக்கு விஜயம் மேற்கொண்ட நிதியமைச்சர், நிர்மலா சீதாராமன் மற்றும் எஸ் ஜெய்சங்கர் ஆகியோருடன் கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.

இதே வேளை இந்திய அமைச்சரின் அழைப்பின் பேரில் தாம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை இந்தியாவிற்கு மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கருக்கு விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்தவின்

தெரியாத குழுவினரால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெள்ளை வானில் வந்த குழுவினர், குடியிருப்பின் பிரதான நுழைவாயிலை பலவந்தமாக திறந்து, அங்கிருந்தா பாதுகாப்பு உத்தியோகத்தரை துப்பாக்கியை காட்டி மிரட்டியதாகவும் தாக்குதல் நடத்தியவர்கள் வீட்டின் மீது கற்களை வீசி தாக்கியதாக சமுதித்த சமரவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது, துப்பாக்கி பிரயோக சத்தங்களை கேட்கக்கூடியதாக இருந்ததாக சமுதித்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த பகுதிக்கு காவல்துறையினர் விரைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பிலியந்தலை காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹிரு தொலைக்காட்சியின் ʽபத்தரே விஸ்தரேʼ என்ற பத்திரிகை விவரண நிகழ்ச்சி மற்றும் ʽசலகுணʼ என்ற அரசியல் உரையாடல் நிகழ்ச்சிகளை சமுதித்த நெறியாள்கை செய்து வருவதுடன் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளை நோக்கி நேரடியாக கேள்விக்கணைகளை தொடுக்கும் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் அவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்று கொழும்பிலும் கையெழுத்து போராட்டம்

சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பங்கேற்கவுள்ளனர்.

1979 ஆம் ஆண்டு ஆறு மாதங்களுக்கு ஒரு தற்காலிக விதிகள் சட்டமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பாட்டில் உள்ளது.

அன்றைய அரசாங்கத்திற்கு எதிரான கருத்து வேறுபாடுகளை நசுக்க கொண்டுவரப்பட்ட இச்சட்டம் இன்றும் தொடர்கிறது என கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் வெளிவிவகார அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காலநிலை மாற்றம்; அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்கள் பாதிப்பு



**(பாறுக் ஷிஹான்)**

கடலில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலை மாற்றங்கள் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கினர்.காலை முதல் மாலை வரை மப்பும் மந்தாரமுமாக இருந்த நிலையில் இடையிடையே சிறிய மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பெரியநீலாவணை, சாய்ந்தமருது ,மருதமுனை, பாண்டிருப்பு , அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஒலுவில் , போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு ,காற்றின் திசை மாற்றம் , நீரோட்டத்தில் ஏற்ப்பட்டுள்ள திசை மாற்றம் கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுகின்ற காரணங்களால் கடல் அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதினாலும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக இவ்வாறான காலநிலை மாற்றங்களினால் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதினாலும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.

# திருமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபராக எஸ். நிருபா நியமனம்



**(கதிரவன் )**

திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபராக எஸ். நிருபா நியமிக்கப்படுள்ளார்.

இவர் 2021 ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானமும் போசாக்கும் துறையில் ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## மலையடிபிள்ளையார் ஆலய விவகாரம்;

# திருமலை மாவட்ட செயளாலருடன் மூதூர் இந்து குருமார் சங்கத்தினர் கலந்துரையாடினர்



**(பொன்ஆனந்தம் )**

மூதூர் இந்து குருமார் சங்கம் நேற்று திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட செயளாலரை சந்தித்து மூதூர் 64ம் கட்டை மலையடிபிள்ளையார் ஆலய காணி விவகாரம் பற்றியும் அதன் அபிவிருத்தி பற்றி யும் கலந்துரையாடினர் .

நேற்று முற்பகல் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் குறித்த பிள்ளையார் ஆலய அபிவிருத்திக்கு காணி விவகாரம் தடையாக இருப்பதாக மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டி கோராள விற்கு குழுவினர் தெளிவு படுத்தினர்.

குறித்த காணிப்பகுதி புண்ணிய பூமி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதாகவும் குறித்த ஆலய கட்டுமான பணிகள் மேற்கொள்ள வேண்டாம் என மூதூர் பிரதேச செயலாளர் தடை விதித்திருந்தார்.

இது தொடர்பாக மூதூர் பிரதேச செயலகத்தில் சங்கத்தினர் சந்தித்து கூட்டங்களை நடாத்தியிருந்தனர். ஆயினும் சாதகமான முடிவு கிடைக்கப்பெறாத நிலையில் இன்றையதினம் அரச அதிபரை சந்தித்து ஆலய தன்மை, மற்றும் அதன் அபிவிருத்தியில் உள்ள தடைகள் பற்றி இந்து குருமார் சங்கத்தினர் எடுத்துரைத்தனர்.

இச்சந்திபில் மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் பாஸ்கரன் குருக்கள், செயளார் சு. வேலுப்பிள்ளை, பொருளாளர் முன்னிலை உறுப்பினர் பவன் சர்மா மற்றும் சுகிராஜ குருக்கள் சகிதம் ஐந்து பேர் கலந்து கொண்டனர்.

இது பற்றி தலைவர் குறிப்பிடுகையில், எமது மூதூர் 64ம் கட்டை (சகாயபுரம்) மலையடிவாரத்தில் வீற்றிருக்கும் மலயடிபிள்ளையார் ஆலயத்திற்கான காணிஎல்லை பகுதியை உறுதிபடுத்தி தருமாறு தாம் அரச அதிபரை கோரியதாக குறிப்பிட்டுள்ளார்.

இக் கோரிக்கையை அரச அதிபர் உடன் கவனத்தில் எடுப்பதாக கூறியுள்ளார். எனவும் தலைவர் தெரிவித்தார் .

இது தொடர்பாக ஏற்கனவே எழுத்து மூலமாக மூதூர் பிரதேச செயளாலர் உட்பட மாவட்ட செயளாலர் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் கோயில் காணி கோரி கடிதம் அனுப்பி யுள்ளதாகவும் இங்கு குறிப்பிட்டார். இந்த பிரதேசத்தில் புண்ணிய பூமி திட்டத்தின் கீழ் பௌத்த ஆலய அபிவிருத்தி புதிதாக நடைபெற்று வருகிறது. பல பொது மக்களின் காணிகளை இதற்கு உள்வாங்கப்பட்ட நிலையில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடாத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வலயம் போல் சவால்கள் நிறைந்த வலயம் இலங்கையில் எங்குமில்லை!



## சேவை நலன் பாராட்டு விழாவில் சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் நஜீம் கவலை!

**(காரைதீவு சகா)**

சம்மாந்துறை வலயம் போல் சவால்கள் நிறைந்த வலயம் இலங்கையில் எங்குமில்லை. கல்விநிருவாகசேவைஅதிகாரிகள் மூன்று வருடமாவது சம்மாந்துறையில் பணியாற்றினால் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றும் திறன் கிடைக்கும்.அப்படி பல சவால்களுக்கு முகம்கொடுத்து வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியில் கல்விசார் உத்தியோகத்தர்களின் அயராத ஒத்துழைப்புடன் பணியாற்றிக் கிடைத்த சரித்திர சாதனையை யாரும் கண்டுகொள்வதில்லை.

இவ்வாறு சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் கவலை தெரிவித்தார்.

சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் , கடந்த2 வருட காலத்தில் பணியாற்றி ஒய்வுபெற்றுச்சென்ற பத்து கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான சேவைநலன்பாராட்டுவிழா, ஒன்றியத்தலைவர் எம்.எ.சபூர்தம்பி தலைமையில் உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்மாந்துறை அல்அஸ்ஹர் மகாவித்தியாலய திறந்தவெளியில் நடைபெற்ற இச்சேவைநலன்பாராட்டுவிழாவில் கணக்காளர் சீ.திருப்பிரகாசம் ,பொறியியலாளர் எ.எம்.ஸாஹீர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான எம்.எஸ்.எம்.அமீர், எஸ்.எம்.எம்.ஹைதர் அலி ,பி.எம்.யாசீர் அறபாத், ஏ.எல். அப்துல்மஜீட் உதவிக்கல்விப்பணிப்பாளர்களான ஏ.நசீர், யு.எல்.றியால் ,நிருவாகஉத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முஷரப் ஆகியோர் கௌரவஅதிதிகளாகக்கலந்துகொண்டனர்.

ஒய்வுபெற்றுச்சென்ற திருமதி மகா.செல்வராஜா எம்.ஏ.அப்துல்றசூல் ,பி.இஸ்மாயில், பி.சிறாஜுதீன் ,எ.அச்சிமொஹமட் ,கே.செல்வராஜா ,எ.அப்துல்றஹீம், எம்.எஸ்.அப்துல் அசீஸ், யு.அப்துல்மஜீட் ,எம்.எம்.அப்துல்சத்தார் ஆகிய பத்து உத்தியோகத்தர்கள் பொன்னாடைபோர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஒய்வுபெற்ற பத்து உத்தியோகத்தர்களைப் பாராட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் யு.எல்.மஹ்மூட் லெவ்வை, உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியஆலோசகர் இசட்.எம்.மன்சூர் கவிதைபாடி அசத்தினார்.

அங்கு பணிப்பாளர் நஜீம் மேலும் பேசுகையில்:

கிழக்கு மாகாணத்திலுள்ள 13 கல்வி வலயங்களில் பின்தங்கிய பிரதேசங்களையும் கொண்டு சரித்திரசாதனை படைத்தது எமது சம்மாந்துறை வலயம் என்பதை யாரும் மறுதலிக்கமுடியாது.அதற்காக தோளோடு தோள் நின்று உழைத்த முக்கிய பங்காளிகள் நீங்கள். கடந்த 10வருட பொதுப்பரீட்சைப்பெறுபேறுகள் சாதனைகள் அதற்கு சான்றுபகரும். ஆனால் அவற்றைக் கண்டுகொள்ளாமல் சிறுசறுக்கல் வரும்போது பொறாமைபிடித்த ஒருசில எதிரிகள் தூக்கிப்பிடித்துக்கொண்டு தூற்றுவார்கள். விமர்சனம் பண்ணுவார்கள்.

86 ஆகவிருந்த தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை சித்திகளை எமது 8வருடப்போராட்டத்தில் 20%ஆக மாற்றி சாதனை படைத்துள்ளோம். 2016இல் 44வீதமாகவிருந்த க.பொ.த..சா. தரப்பரீட்சைப்பெறுபேறுகளை 2020இல் 64வீதமாக உயர்த்தியுள்ளோம்.அதேபோன்று பல்கலை அனுமதிகளை 20வீதத்தால் உயர்த்தியுள்ளோம்.

2015இல் க.பொ.த சாதர கணிதபாடத்தில் %4வீத சித்தியைப் பெற்று அகிலஇலங்கைரீதியில் முதலிடம் பெற்றோம். அதற்காக உழைத்த கணிதபாட உதவிக்கல்விப்பணிப்பாளர் பிரேமானந்தா, ஆசிரியஆலோசகர் சிறாஜுதீன் உள்ளிட்ட கணிதபாட ஆசிரியர்களை மறக்கமுடியாது.24மாணவர்கள் 9ஏ சித்திபெற்றார்கள். முழுஇலங்கையுமே சம்மாந்துறையை திரும்பிப்பார்த்தது.

அதேபோல் 2016இல் க.பொ.த உயர்தரத்தில் 12மாணவர்கள் மருத்துவபீடத்திற்குத் தெரிவாகி சாதனை படைத்தார்கள். இதனைக்கண்டு சகிக்கமுடியாமல் பொறாமைபிடித்தவர்கள் எதிரிகள் சம்மாந்துறை சாதனைப் பெறுபேற்றுக்கு களங்கம் ஏற்படுத்தி கரிபூசமுனைந்தார்கள். பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள்.

பரீட்சைஆணையாளருக்கு பிட்டிசம் எழுதினார்கள். அவர்களுக்குத் தெரிந்தது பிட்டிசம் எழுதுவதும் மற்றவர்களை மட்டம்தட்டி படுகுழியில் வீழ்த்துவதுமே.

இறைவன் பெரியவன். அனைத்தும் தவிடுபொடியாகின.அடுத்த உயர்தரப் பரீட்சைக்கு சம்மாந்துறைக்கு மட்டும் மேலதிக மேற்பார்வையாளர்களை நியமித்தார்கள். வெளிமாவட்டத்திலிருந்து வந்த மேலதிக மேற்பார்வையாளர்கள் பரீட்சார்த்திகளை சல்லடைபோட்டு சோதனைசெய்தார்கள்.

பல நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் எமது மாணவர்கள் சளைக்கவில்லை மசியவில்லை. சுயபுத்தியை பயன்படுத்தி நன்றாக எழுதி அந்தமுறை மேலும் நல்ல பெறுபேற்றைக்காண்பித்தார்கள்.

கற்றகல்வியை களவாடமுடியாது மூளையை குழப்பமுயற்சித்தார்கள். எனினும் 15 மாணவர்கள் பொறியியல்துறைக்குத் தெரிவானார்கள். இறக்காமத்திலும் 2பேர் மருத்துவத்துறைக்கும் 4பேர் பொறியியல்துறைக்கும் தெரிவாகி சாதனை படைத்தார்கள். இது சாதனை. 2020இல் அதிகூடிய 20பேர் பொறியியல் துறைக்கு தெரிவானர்கள்.

இந்த சரித்திர சாதனை யாருக்கும் தெரியாது. யாரும் இதனைக்கண்டுகொள்ளவில்லை. இறைவன் போதுமானவன். உங்களது அர்ப்பணிப்பு தியாகம் வீண்போகவில்லை. சவால்களுக்கு மத்தியில் வேலைசெய்வதையே நான்விரும்புகிறேன். அப்படியென்றால்மட்டுமே சிற்நத அனுபவத்தை பெறலாம்.சாதனையை எட்டலாம்.அதில் தான் மகிழ்ச்சிஇருக்கிறது. எமது வலயகல்விஅபிவிருத்திக்காக உழைத்து ஓய்வுபெற்ற உங்களை வலயம் சார்பில் மனதார வாழ்த்துகிறேன். என்றார்.

நலன்புரி ஒன்றியத்தினர் பணிப்பாளரின்சேவையைப்பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.ஒன்றியபொருளாளர் கே.இரத்னேஸ்வரன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒழுங்கமைத்திருந்தார். பணிப்பாளர் நஜீம் ,பொறியியலாளர் எ.எம்.ஸாஹீர், ஆசிரியஆலோசகர் எ.எச்.எம்.ஸவாஹிர் ஆகியோர் பாடல்பாடி அசத்தினர்.

ஒன்றியச் செயலாளர் எ.எச்.எம்.ஸவாஹிர் பாடல்பாடி நன்றியுரையாற்றினார்.

# இலங்கை,கட்டார் நிருவனத்தினுடைய வேற்றிவிழாவும் வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வும்



இலங்கை மற்றும் கட்டார் நாடுகளிலே குறிப்பாக கிரிக்கட் துறையிலும் சமூக சேவைகளிலும் தனக்கான ஓர் இடத்தை பிடித்து முன்னோடியாக திகழ்கின்ற ஈஸ்ட்ன் பேள்ஸ் ஸ்ரீலங்கா மற்றும் கட்டார் நிருவனத்துடைய வெற்றி விழாவும் வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கிரிக்கட் சங்கத்தின் தலைவர் எம்.எம். நிஜாமுதீன் பிரதம அதிதியாகவும் , சாய்ந்தமருது கிரிக்கட் சங்கத்தின் உப தலைவர் ஏ. றம்ஸான் ,சாய்ந்தமருது கிரிக்கட் சங்கத்தின் சுற்றுப் போட்டி தவிசாளர் எம்.ஜே.எம். றாஜுடீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# பட்டிருப்பில் இணைந்த கணித மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும்

(சுமன்)

மாவட்டத்தின்ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஸ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் போது கனிஸ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பபார்வையார்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனாலேயே பட்டிருப்பில் இணைந்த கணிதம் பரீட்சையின் போது குழறுபடி ஏற்பட்டது. மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர்சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ. உதயரூபன் தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போமீது அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கைடியில்

அண்மையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இணைந்த கணிதம் உயர்தரப் பரீட்சையின் போது இடம்பெற்ற குழறுபடி தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அன்றைய தினம் பிரதி பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அச்சமயம் அப்பரீட்சையில் கடமையாற்றியவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக நிலைமையை எமது பொதுச்செயலாளரிடம் விளக்கியிருந்தார்.

இருந்தும் இந்தப் பரீட்சை தொடர்பில் மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

அண்மைக்காலமாக பட்டிருப்பு கல்வி வலயத்தினுடைய கல்வி வளர்ச்சி ஒரு துரிதமான நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த முறை இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் மருந்துவத் துறையில் பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவன் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு அதேவேளை கல்லாறில் 26வது நிலையில் பொறியியல் பீடத்திற்கு மாணவியொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் 52 மாணவர்கள்; இணைந்த கணிதம் பாடத்திற்குத் தோற்றிய போது அதில் 50 வீதமான மாணவர்கள் பரீட்சையில்




சித்தியடைந்திருந்தார்கள். மற்றும் ஏனைய பாங்கள் தொடர்பிலும் பட்டிருப்பின் கல்வி வளர்ச்சி மிக உயர்வாகக் காணப்பட்டதோடு 50 வீதமான மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வலயத்திற்கு பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள். அத்துடன் கடந்த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் முதலாவது இடத்தை பட்டிருப்பு வலயம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு இருக்கையில் மேற்குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றருக்கின்றது. அதற்கு பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கின்றபோதும், இந்த மேற்பார்வையாளர்களை யார் நியமித்தது என்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்கு பரீட்சைகள் ஆணையாளர் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏனெனில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து பெரும்பாலான அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த வருடம் கடமைப் பொறுப்புகள் கையளிக்கப்படவில்லை. பரீட்சை தொடர்பில் நீண்ட காலம் அனுபவத்துடன் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு புதிதாக நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டத்தின்ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஸ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் போது கனிஸ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பபார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேநேரம் பரீட்சை மேற்பார்வை கடமைகளில் முழு நேரமாக ஈடுபட வேண்டியவர்கள் நேற்றைய தினம் பரீட்சை பகுப்பாய்வு என்ற சொல்லி மட்டக்களப்பு கல்வி வலயத்தில் நடத்துகின்றார்கள். இது தொடர்பில் நேரடியாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், பிரதிப் பரீட்சை ஆணையாளரிடமும் தெரிவித்திருந்தோம். அவர் முழு நேரமும் பரீட்சைக் கடமையில் ஈடபட வேண்டியவர் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும் கடமையில் எவ்வாறு ஈடுபட முடியும்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல் இந்த மாணவர்களுக்குப் பொருத்தமான நடவக்கையை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நாங்கள் பரீட்சைகள் பிரதி ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித்திருக்கின்றோம் மேலும் மாகாண ஆளுநருடனும் கலந்துரையாடவுள்ளோம் என்று தெரிவித்தார்.

# ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

2021ம் ஆண்டில் தேசிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 08.02.2022ந்திகதி செவ்வாய்க்கிழமை ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எம். ஷாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி குஹுஹுகு.உமர் மௌலானா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஏனைய அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிமனையுன் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளரும், பாடசாலை மேம்பாட்டு வலயப்பிரதிநிதியுமான ஓ.தாஜுன்னிஸா, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளரும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயக் கல்வி முகாமைத்துவப் பொறுப்பாளருமான நகூ.அஜ்மீர், கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை பிரதித்தவிசாளர் குஏ.அமீர், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அஹு.ஜாபிர் கரீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், ஊர்ப்பிரமுகர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பெற்றார்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

தரம் 1 மாணவர்களது வரவேற்பு நடனம், போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர் நிகழ்ச்சிகள், அரபு கஸீதா என்பன இடம் பெற்றதுடன், போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கு நான் ரமீஸ் நானா சமூக சேவைகள் அமைப்பு (கட்டார்) நிதிப்பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில்

# நிந்தவூர் அறநெறி மாணவருக்கு இந்து சமய நூல்கள் கையளிப்பும் அன்னதானமும்




(காரைதீவு சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிந்தவூர் சிவமுத்துமாரியம்மன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு ஆன்மிக நூல்கள் வழங்கப்பட்டதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சிவனருள் பவுண்டேசன் நிறுவனமும் இணைந்து நடாத்திய இவ்விஷேட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(11) இடம்பெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ஆன்மிக நூல்கள் அங்கு அறநெறி மாணவருக்கும் அக்கரைப்பற்று அம்மன் மகளிர் இல்லத்திற்கும் வழங்கப்பட்டன. மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா நெறிப்படுத்த ஆலயதலைவர் கி. ஜெயசிறில் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிவனருள் பவுண்டேஷன் நிறுவன செயலாளரும் அக்கரைப்பற்று அம்மன் மகளிர் இல்லப் பணிப்பாளருமான கே. வாமதேவன் ஆலையடிவேம்பு பிரதேசசபைத் தவிசாளர் எஸ்.கிறோஜாதரன் மற்றும் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு அறநெறி மாணவர்களின் பேச்சு பஜனை கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அறநெறி மாணவி எஸ்.ஷாஹரியின் ஆலயவழிபாடு பற்றிய உரை பலரையும் கவர்ந்தது.

கூடவே அக்கரைப்பற்று அம்மன் சிறுவர் இல்லத்துக்கு ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டது.ஆலய பரிபாலனசபையினருக்கும் நூல்த் தொகுதிகள் வழங்கப்பட்டன.

ஆலயத்திற்கு உதவிய காரைதீவைச்சேர்ந்த மாவடி கந்தசுவாமிஆலய தர்;மகர்த்தா க.ஆறுமுகம் லண்டன் கோகுலரமணன் துரைரத்னம் உள்ளிட்ட சிலபிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

இறுதியில் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்று மாணவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

பெருந்தொகையான பக்தர்களும் கலந்துகொண்டனர். ஆலயசெயலாளர் த.சண்முகநாதன் நன்றியுரையாற்றினார்

# பொதுஜன பெரமுனவின் சேருவில தேர்தல் தொகுதியில் மகளீர் அணியின் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம்




(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில தேர்தல் தொகுதியின் மகளீர் அணியின் சம்மேளன பொதுக்கூட்டம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவின் தலைமையில் கந்தளாய் நகர மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(13) மாலை நடைபெற்றது.

எதிர்வருகின்ற தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு,அரசாங்கத்தின் சௌபாக்கிய வேலைத்திட்டங்களில் பெண்களுக்கான சுயதொழில் ஏற்பாடுகள்,கிராம வீதி அபிவிருத்திகள்,மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களில் பங்கு போன்ற தலைப்புகளில் சம்மேளனக் கூட்டம் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ,மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின்தலைவருமான அமரகீர்த்தி அத்துகோரள, கிழக்கு மாகாண சபையின் முன்னால் அமைச்சர் ஆரியவதி கலப்பதி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின்தலைவர்சட்டத்தரணி நிலாந்த விஜேசிங்க, கந்தளாய்,கோமரங்கடவெல,மொறவெவ,மற்றும் சேருவில போன்ற பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெண்களுக்கான சேருவில தேர்தல் தொகுதியின் தலைவி திருமதி யோகேஸ்வரி மற்றும் திருமதி துஷாந்தி. குணரத்ன,உட்பட பெருந்திரலான பெண்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

# ஆலயத்திற்கு சிசிரிவி கமரா உபகரணங்கள்!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் பாதுகாப்பு சிசிரிவி (CCTV)கமரா பொருத்துவதற்கான உபகரணங்களை காரைதீவைச்சேர்ந்த மாவடி கந்தசுவாமிஆலய தர்மகர்த்தா க.ஆறுமுகம் குடும்பத்தினர் அன்பளிப்புச்செய்தனர். அவ் உபகரணங்களை ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் உள்ளிட்ட பரிபாலனசபையினரிடம் திரு.ஆறுமுகம் கையளிப்பதைக் காணலாம்.

படங்கள் : காரைதீவு நிருபர் சகா

# ஆலையடிவேம்பிலும் சமுர்த்தி அதிகரித்த நலனுதவி கொடுப்பனவு வழங்கும் தேசிய வேலைத்திட்டம்




(வி.சுகிர்தகுமார்)

அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டின்வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய சமுர்த்தி பயனாளிகளுக்கு இம்மாதம் முதல் அதிகரித்த நலனுதவி கொடுப்பனவு வழங்கும் தேசிய வேலைத் திட்டம் ஆரம்பமானது.

தேசிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் 331 பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 14022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இத்திட்டம் நேற்று காலை 10 மணிமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 22 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் அதிகரித்த நலுனுதவி கொடுப்பனவு இன்று காலை முதல் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஆலோசனையின் பிரகாரம் கிராமங்கள் தோறும் இடம்பெற்ற அதிகரித்த நலனுதவி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்சிவப்பிரியாசுதாகரன் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் ஆர்.மதியழகன் சமுர்த்தி முகாமையாளர்களான கே.அசேராக்குமார் எஸ்.சுரேஸ்காந் உள்ளிட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிகரித்த முத்திரை கொடுப்பனவு வழங்கல், வலுவூட்டப்பட்ட சமுர்த்தி குடும்பத்திற்கான பொற்சான்றிதழ் வழங்கல், வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான பழமரக்கன்றுகள் வழங்கல், சமுர்த்தி வங்கியினூடாக கடன் பெறுவது தொடர்பிலான ஆலோசனை வழங்கல், 2022 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள சமுர்த்தி திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

# மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமாதான வேலைத்திட்டம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது. நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துக் காணப்படும் நிலையில் டெங்கு பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதார பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு நோய்களினைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட வழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் படையினருடன் இணைந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுவருகின்றது.

அதற்கமைவாக பொது இடங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்ற இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் அவர்களது தலைமையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளாகம் சனிக்கிழமை சிரமதான நடவடிக்கை மூலம் சுத்தம் செய்யப்பட்டது. இதன் போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் அதிகளவிலான உத்தியோகத்தர்கள் இச்சிரமதான நடவடிக்கையில் ஆர்வத்துடன்கலந்து கொண்டு அலுவலக வளாகத்தினையும் அலுவலக சுற்றுச்சூழலையும் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றி நடப்பதுடன், டெங்கு நுளம்பு பரவலில் இருந்தும் அவதானமாக இருக்க வேண்டுமென மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் அவர்களினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் சுவதம் விருது பெற்றார் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர்



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சாய்ந்தமருதைச் சேர்ந்த பல்துறைக் கலைஞரும் ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம். ஸாகிர் கலாசார, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச செயலகங்கள் ரீதியாக கலைஞர் சுவதம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட கலை, இலக்கிய மற்றும் எழுத்துத்துறைகளில் பங்காற்றிவரும் தமிழ் பேசும் கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் அண்மையில் (08) நடைபெற்றபோது இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸானின் ஒருங்கிணைப்பில், அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வேதநாயகம் ஜெகதீசனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகா ஆகியோர் இணைந்து இவ்விருதினை வழங்கி வைத்தனர்.

நவமணிப் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஊடகவியலாளராகப் பணியாற்றிய இவர், பாடசாலையில் படிக்கும் காலத்தில் இருந்தே கலை இலக்கியச் செயற்பாடுகளான கவிதை, நாடக நடிப்பு, பாடல், அறிவிப்பு, சிறுகதை ஆக்கம், படிப்பினையூட்டும் கதைகள், பொல்லடி (கோலாட்டம்), றபான் என பல்துறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, பிரகாசித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சேதனப்பசளையை பயன்படுத்தி நஞ்சற்ற உணவை பெறுவதே நல்லது!

## லாகுகலையில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் புதிய செயலாளர் முத்துபண்டா




**(காரைதீவு நிருபர் சகா)**

சேதனவிவசாய நடைமுறைகளைப் பின்பற்றி சேதனப்பசளையை பயன்படுத்துவதன்மூலம் தரமான நஞ்சற்ற உணவு உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.அது நீடித்த ஆயுளையும் வளமான ஆரோக்கியத்தையும் தரும்.

இவ்வாறு லாகுகலையில் நடைபெற்ற விவசாய விழாவில் உரையாற்றிய கிழக்குமாகாண விவசாயஅமைச்சின்புதியசெயலாளர் ஜ.ஜே.கே.முத்துபண்டா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட லாகுகலை வலயத்தின் சிறந்த விவசாயிகளுக்கான பரிசு வழங்கும் வைபவமும் அவர்களுக்கான உள்ளீடு வழங்கும் வைபவமும் அப்பிரதேச விவசாயபோதனாசிரியர் எஸ்.சித்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் புதிய செயலாளர் ஜ.ஜே.கே. முத்துபண்டா பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு சிறந்த விவசாயிகளுக்கான பரிசுகளை வழங்கிவைத்துரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு .அவர்களுக்கான விதை உள்ளீடுகளையும் வழங்கி வைத்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

விவசாயிகள் சேதனமுறைகளைக்கையாண்டு சிறந்த முறையில் உங்கள் உற்பத்திகளை மேலும் கூடுதலானளவு அதிகரிக்கவேண்டும்.விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த விலையினைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.என்றார்.

இந்நிகழ்வில் கிழக்குமாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி எஸ். எம்.ஹுசைன் ,அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பி.திசாநாயக்க ,லாகுகலை பிரதேச உதவி விவசாய பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன்,தலைமை விவசாய போதனாசிரியர் எ.வி.தஸ்லீம் மற்றும் விவசாய போதனாசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தினூடாக விவசாயிகளுக்கு கப் (G-A-P) சேதன வீட்டுத்தோட்டம் மற்றும் விதையுற்பத்தி திட்டங்களுக்கான உள்ளீடுகள் மற்றும் நிலக்கடலை விதைகள் வழங்கி வைக்கப்பட்டன..

# காரைதீவு பிரதேச செயலக இலக்கிய விழாவும், காரையோளி மலர் வெளியீடும் !




**(மாளிகைக்காடு நிருபர்)**

கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கிய விழாவானது பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு வி. விக்னேஸ்வரன் ஒருங்கிணைப்பில் சுவாமி விபுலானந்தா ஞாபகார்த்த பணி மன்றத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 'காரையொளி'மலர் வெளியீடும், இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ், நினைவுச்சின்னம் ,பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களான திரு ரி.எம் றிம்ஸான், கு.ஜெயராஜீ அவர்களும் சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.எம் அச்சி முகமட் மற்றும் கலாசார அதிகார சபையின் செயலாளர் எஸ். நாகராஜா, காளி கலா மன்றத் தலைவர் எஸ். ராமநாதன் மற்றும் பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம்.புண்ணியநாதன் கலாசார உத்தியோகத்தர்களான எம்.சதாகரன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் லோ.சிவலோஜினி, எஸ்.எம். ஜெலிலா, பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் பல கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றது.

# எமது சேவையைத் தவறி எந்தவொரு கோரோனா மரணமும் நிகழவில்லை; வைத்திய அத்தியட்சகர் டயாழினி

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எமது சேவையைத் தவறி எந்தக் கொரோனா மரணமும் நிகழவில்லை.எமது சக்திக்கு அப்பாற்பட்ட மரணங்கள் தான் ஏற்பட்டுள்ளன என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.அண்மையில் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ் மாவட்டத்தில் அதிகமான கொரோனா தொற்று தென்மராட்சி பிரதேசத்தில் தான் பதிவாகியுள்ளது.ஆரம்பத்தில் கொரோனா என்ற பய உணர்வு மாத்திரமே காணப்பட்டது.அந்த நிலையில் எமது பணியாளர்கள் கடமைக்கும் அப்பால் இதயபூர்வமான சேவையை வழங்கியிருந்தனர்.பாதுகாப்பு அங்கியுடன் தானே பணியாற்றுகின்றனர் என்ற உணர்வு வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தோன்றலாம். ஆனால் பாதுகாப்பு அங்கியுடன் பணி புரிந்தவர்களால் மாத்திரமே அந்த அவஸ்தையை உணர முடியும்.



எமது வைத்தியசாலையில் 20கொரோனா நோயாளர்களை வைத்து பராமரிக்க வேண்டிய இடத்தில் ஒரே நேரத்தில் 48தொற்றாளர்களை பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.எமது சக்திக்கும் அப்பால் சேவையாற்றி இருந்தோம்.சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 15கொரோனா மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளது.அதிலும் தடுப்பூசி செலுத்தாதோர் மரண விகிதமே அதிகம்.இறந்தவர்களில் 26வயது தொடக்கம் 9%வயது வரையானோர் உயிரிழந்த போதிலும் அவர்கள் வேறு பல நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த 15மரணங்களும் எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட மரணங்கள்.எமது சேவையைத் தவறி எந்தவொரு மரணமும் நிகழவில்லை.வேறு நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் அந்த 15உயிர்களையும் கூட காப்பாற்றி இருக்க முடியும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.






**கல்முனைகுடி செயிலான் வீதியில் வீடு ஒன்றில் கேஸ் அடுப்பு வெடித்து தீக்கரையான சம்பவம் ஒன்று பதிவாகி யுள்ளது.**

# கிண்ணியா பிரதேச ஆசிரியர் இடமாற்றத்தில் சமூக நீதி பேணப்படவில்லை: ஆசிரியர்கள் புகார்

(எப்.முபாரக்)

கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குகான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரே பாடசாலையில் எட்டு வருடங்கள் ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

விண்ணப்ப படிவங்கள், வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரே பாடசாலையில் எட்டு வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள், குறித்த பாடசாலை அதிபர் ஊடாக திகதிக்கு முன்னர் அவற்றை பூர்த்தி செய்து வலயக்கல்வி பணிமனைக்கு சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்படவில்லை எனவும், அரசியல், கட்சி, நட்பு, பதவி நிலை மற்றும் உறவுமுறை போன்ற விடயங்கள் ஆதிக்கம் செலுத்தியதாகவும் இதனால் ஆசிரியர் இடமாற்றத்தில் பாடசாலை தேவைகள் கருத்திற் கொள்ளப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களது வீட்டுக்கருகில் நகர்ப்புறப் பாடசாலையில் தொடர்ச்சியாக பத்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது, இவர்கள் அரசியல்வாதிகளை கூஜா பிடித்து ஓரிரு தினங்களில் மீண்டும் அதே பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமையை இவர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

அதேபோல் கடந்த காலங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர், தனது உறவினர்கள் மற்றும் கட்சிக்காரர்களின் இடமாற்றத்தை பாதுகாப்பதற்காகவும் , அவர்களை விரும்பிய பாடசாலைகளுக்கு கொண்டு வருவதற்காகவும் ஒரே பாடசாலையில் எட்டு வருடங்கள் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் கூட அதி கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் பாடசாலைத் தேவையோ, மேலதிக ஆசிரியர்களைசமப்படுத்தும் கொள்கையோ கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில், ஆசிரியர் இடமாற்றத்தில் அநீதி இழைக்கப்பட்டோர் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும், ஆசிரியர் இடமாற்ற சபையின் விதிமுறையை மீறி , அந்த மேன்முறையீட்டு சபையில் வலய கல்விப் பணிப்பாளர் பிரசன்னமாகி இருந்தமை இடமாற்ற சபையின் சுயாதீன செயற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியதாகவும் ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த நிலையில், தேசிய ரீதியில் கிண்ணியாவின் கல்வி வளர்ச்சி தொடர்ந்து கடைசி நிலையில் இருப்பதற்கு பாடசாலை தேவை கருதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமையும் ஆசிரியர் வளங்கள் சமமாகப் பகிரப்படாமையும் ஒரு முக்கிய காரணம் என புத்திஜீவிகளும் சமூக அமைப்புக்களும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.

எனவே, கொரோனா அனர்த்த சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்கள் கிண்ணியா கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது வருடாந்த இடமாற்றத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில், மேற்கொள்ளப்பட இருக்கின்ற இந்த இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்பட வேண்டும் என ஆசிரியர்களும் பெற்றோர்களும் எதிர்பார்க்கின்றனர்.

## இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய தனி நபர் சைக்கிளோட்டம்



(நூருல் ஹுதா உமர்)

74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 140% கிலோமீட்டர் சைக்கிள் சவாரியை பொத்துவிலை சேர்ந்த சுல்பிகார் சனிக்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து ஆரம்பிக்கும் நிகழ்வு சனிக்கிழமை காலை சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது.

இந்த சைக்கிள் சவாரி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை வந்தடையும். இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜே.ஜே. பௌண்டேசன் தலைவர் டாக்டர் எம்.வை.எம்.அனீப் கலந்து கொண்டதுடன் சிறப்பதிதிகளாக ஸ்ரீலங்கா உலமா கவுன்சில் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத், கவிஞர் பொத்துவில் அஸ்மின், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம் இர்பான், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் மஜீத், உல்லாசபயணத்துறை தலைவர் ஜஃபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை கடலில் மூழ்கிய மீன்பிடி படகு

(எஸ்.அஷ்ரப்கான் )



கல்முனை பிரதேச கடலில் மீன்பிடி படகு ஒன்று நேற்று(14) மூழ்கும் நிலையில் காணப்படுகிறது. நேற்றுமுன்தினம் (13) மாலை முதல் இந்த படகு கல்முனை கடல் பிரதேத்திலிருந்து சாய்ந்தமருது பிரதேசம் வரை நீரோட்டம் காரணமாக மூழ்கிய நிலையில் அடித்து வரப்பட்டுள்ளது.

இதேவேளை சாய்ந்தமருது கடற்கரையிலிருந்து சுமார் 400 மீற்றல் தொலைவில் இப்படகு மூழ்கி காணப்படுகின்றது.

கல்முனையை சேர்ந்த படகு உரிமையாளர் உள்ளிட்ட குழுவினர் மூழ்கும் குறித்த படகினை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே வேளை இப் படகு மூழ்குவதற்கான காரணம் இயந்திர கோளாறா அல்லது வேறு ஏதாவது நாசகார செயலா என்பது தொடர்பில் தகவல் வெளியாகாத போதும், கடல் கொந்தளிப்பே காரணமாக இருக்கலாம் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## திருக்கோவில் பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியைகள் சம்பள அதிகரிப்பு கோரி பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி






(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு

நாட்டில் நாளாந்தம் விலைவாசிகள் அதிகரித்துச் செல்லும் நிலையில் தமக்கு மாந்தம் வழங்கப்படும் 4ஆயிரம் ரூபா கொடுப்பனவு போதாது என்றும் இதனை அரசு உடனடியாக அதிகரித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்து அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியைகள் பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் கவணயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை முன்பள்ளி ஆசிரியைகள் திருக்கோவிலில் நேற்று முன்னெடுத்து இருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டமானது முன்பள்ளி ஆசிரியை திருமதி தேவராணி அருள்ராஜ் யின் ஏற்பாட்டில் திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமாகி திருக்கோவில் நீதிமன்ற வீதி வழியாகச் சென்று திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாக கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்

இதனையடுத்து திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரனிடம் கோரிக்கை மகஜர் ஒன்றினையும் வழங்கி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்பாட்டக்காரர்கள் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் தமது கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இருந்ததுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனிடம் தமது கோரிக்கை மகஜரைக் கையளித்து இருந்தனர்.

இதன்போது திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் ஆகியோர் ஆர்ப்பாட்டகாரர்களிடம் இருந்து மகஜரைப் பெற்றுக் கொண்டு இவ்வாறு தமது கருத்தக்களை தெரிவித்து இருந்தனர்.

## பசுமை விவசாயச் செயற்பாட்டு மையத்தின் இயற்கை உர உற்பத்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஹ0ஹஹ





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

விவசாய இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய இயற்கை உர உற்பத்திக்கான தேசிய வேலைத்திட்டம் நிகழ்நிலை ஊடாக நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இயற்கை உரங்களை கொள்வனவு செய்தல், உற்பத்தியாளர்களை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டம் என்பன தொடர்பாக மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்நிலை கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை உர உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் இயற்கை உர உற்பத்தியில் ஏற்படும் பிரச்சனைகள், உரம் விற்பனையை விரிவுபடுத்துதல், சேமிப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், உரம் உற்பத்திக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், 231 ஆவது இராணுவப் படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் மற்றும் விவசாய திணைக்களத்தின் உயரதிகாரிகள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் மற்றும் இயற்கை உர உற்பத்தியாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன் நிறைவில் 231 ஆவது இராணுவப் படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார உள்ளிட்ட உர திணைக்களத்தின் அதிகாரிகளும் கள விஜயமொன்றினை மேற்கொண்டு மாவட்டத்தில் தற்போது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள இயற்கை உரத்தினை பார்வையிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சுவாமி விபுலாநந்தர் பிறந்த வீதி கார்ப்பட் வீதியாகிறது!



(காரைதீவு நிருபர் சகா)

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவு வீதி கார்ப்பட் வீதியாக புனரமைக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் 10லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் இவ் விபுலாநந்தவீதி 500மீற்றர் நீளத்தில் கார்ப்பட் ஆகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை கார்ப்பட் வீதியமைக்கும் வேலைத்திட்டத்தை நேற்று ஆரம்பித்தது.வீதியின் இருமருங்கிலும் ''டிஸ்க்'' ரக வடிகான் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 12வருடங்களுக்கு முன்பு இவ்வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டபோதிலும் வீதிபூராக மழைகாலங்களில் வெள்ளம் ஆங்காங்கே தேங்கி நின்று போக்குவரத்திற்கு இடைஞ்சலாக காணப்பட்டது.மேலும் இவ்வீதி சேரும் சந்தியில் மத்தியவீதி கார்ப்பட் இடப்படும்போது இடம்பெற்ற முறைகேடுகளாலும் இவ்வீதியில் வெள்ளம் குளம்போல் நீர் தேங்கிநின்றது.

## களுவாஞ்சிகுடி போலிஸ் நிலைய பரிசோதனை நிகழ்வு





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பரிசோதனை நிகழ்வு திங்கட்கிழமை(14) இடம்பெற்றது. இதன்போது பொலிசாருக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டு, பொலிசார் பயன்படுத்தும், வாகனங்கள், புத்தகங்கள், உள்ளிட்ட பல ஆவணங்கள் இதன்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க அவர்கள் இதன்போது கலந்து கொண்டு பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார்.

மேலும் களுவாஞ்சிகுடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜனக ஜெயரத்ன, களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் அபேவிக்ரம, ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# குறுகிய மன்னார் தீவை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டாம்

## பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி ஞானபிரகாசம் அடிகளார்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவு 25 கிலோ மீற்றர் தூரமும் 4 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட நான்கு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்ட ஒரு சிறிய தீவு. தற்பொழுது இது தீண்டடப்பட்டு வருகின்றது. கனியவள மணல் அகழ்வு ஒருபுறமிருக்க தற்பொழுது மன்னார் தீவில் மக்கள் செறிந்து வாழும் அயலில் பொருத்தப்பட்டுள்ள 36 காற்றாலைகளால் மீனவ சமூகம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர் என மன்னார் பிரடிஜைகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞாணப்பிரகாசம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்..

மன்னாரில் மேற்கொள்ளப்பட இருக்கும் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத்தை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கையாக மன்னார் மக்களுக்கு விழிப்புணர்வை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைளின் ஒன்றாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தலைமையில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை கொண்ட குழு மன்னாருக்கு சனிக்கிழமை (12.02.2022) வருகை தந்திருந்ததபோது மன்னார் பிரடிஜைகள் குழுவினரை இவ் குழு சந்தித்தது.

இதன்போது மன்னார் பிரடிஜகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞாணப்பிரகாசம் அடிகளார் இங்கு தொடர்ந்து கருத்துக்களை முன்வைக்கையில்;

பல நூற்றாண்டு காலமாக மன்னார் மக்கள் முக்கியமான எவ்வித அபிவிருத்தியும் காணாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். இருந்தும் அமைதியுடன் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் தற்பொழுது அபிவிருத்தியை சிந்திக்க முடியாத நிலையில் மன்னார் மக்கள் குறிப்பாக மன்னார் தீவு மக்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

மன்னார் தீவு 25 கிலோ மீற்றர் தூரமும் 4 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட நான்கு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்ட ஒரு சிறிய தீவு. தற்பொழுது இது தீண்டடப்பட்டு வருகின்றது. கனியவள மணல் அகழ்வு ஒருபுறமிருக்க தற்பொழுது மன்னார் தீவில் மக்கள் செறிந்து வாழும் அயலில் பொருத்தப்பட்டுள்ள 36 காற்றாலைகளால் மீனவ சமூகம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன் பிறக்கும் குழந்தைகள் கூட குறைபாட்டுடன் பிறக்கும் நிலையும் தோன்றியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 30 வீதமாக மீன்பிடி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் அது உண்மையாக இருந்தாலும் ஆனால் மன்னார் தீவில் காற்றாலைகள் பொருத்தப்பட்டபின் மீன்பிடி பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்திருப்பதே உண்மையான விடயமாகும்.



காற்றாலைகளின் ஒலி நிழல் இதன் அதிர்வு தன்மைகள் போன்ற நிலையால் கடந்த காலங்களில் கரை வந்த மீன்கள் எல்லாம் தற்பொழுது தடைப்பட்ட சம்பவங்களாகவே காணப்படுவதாக மீனவ சமூகம் தெரிவிக்கின்றது

இதனால் கரையோர மீனவர்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். மன்னார் தீவில் காற்றாலை அமைக்கப்பட்டிருந்த இடங்களில் எல்லாம் முன்பு கடல் உட்புகாத தன்மையில் இருந்த மணல் திட்டிகள் மற்றும் கடலோரத்தில் இருந்து வந்த அடம்பன் கொடி போன்ற தாவரங்கள் எல்லாம் அழிந்து போன நிலையில் காட்சியளிக்கின்றது.

இதற்கெல்லாம் நாங்கள் உங்களுக்கு அத்தாட்சிப்படுத்த இயலாதிருந்தாலும் மீனவர்களால் இவைகள் தெளிவாக விளக்கம் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

பறவைகள் காற்றாலை பக்கம் வருகின்றபோது சுழலும் காற்றாலைகளை அச்சமயம் நிறுத்துவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் நாளாந்தம் இவ் காற்றாலைகளால் அயலிலுள்ள மக்களுக்கு இதன் சத்தம் நாளாந்தம் தொல்லையாக இருப்பதாக எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நான் முதலில் இவைகளின் பாதிப்புகளை உணராதிருந்தபோதும் தற்பொழுது பேசாலை பகுதிக்கு பங்கு தந்தையாக சென்றபின்பே இதன் தாக்கங்களை உணரக்கூடியதாக இருக்கின்றது.

இந்த காற்றாலைகளால் மட்டும் மன்னார் தீவில் பிரச்சனை இல்லை மாறாக கனியவள மணல் அகழ்வு எண்ணெய் பரிசோதனை போதைப் பொருள் கடத்தல் போன்ற இவ்வாறான பிரச்சனைகளால் மன்னார் தீவு பாரிய பாதிப்புகளுக்கு தள்ளப்பட்டு வருகின்றது.

நாங்கள் எந்த அபிவிருத்திக்கும் எதிரானவர்கள் அல்ல மாறாக மக்களை பாதிக்கக் கூடிய அபிவிருத்திகளை எற்றுக்கொள்ள தயாராகவும் இல்லை. ஆகவே இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டாம் எனவும் மக்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் இவ்வாறான காற்றாலை திட்டத்தை முன்னெடுக்க வேண்டுமானால் மன்னார் மதவாச்சி ஆகிய இடங்களுக்கிடையே மக்கள் செறிந்து வாழாத இடங்கள் காணப்படுவதால் அவ்வாறான இடங்களை தெரிவு செய்து இவ் திட்டத்தை முன்னெடுப்பதற்கான பரிசோதனையை மேற்கொள்வது நலம் என நாங்கள் நினைக்கின்றோம்.

ஆகவே மன்னாருக்கு எவ்வாறான திட்டங்களையும் முன்னெடுக்கும்போது இங்குள்ள மக்களை பாதிக்காத தன்மையில் மக்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்வதே சிறந்தது என இவ்வாறு மன்னார் பிரடிஜகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ. ஞாணப்பிரகாசம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

# ஊருக்குள் புகுந்த காட்டு யானைகளால் கடை, வீடுகளுக்கு பலத்த சேதம்









(ஹஸ்பர்சு)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்குளம், செம்பிமோட்டை கிராமங்களுக்குள் (13) இரவு புகுந்த காட்டு யானைகள் பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளன சுமார் 6 - 7 யானைகள் ஊருக்குள் புகுந்து பலசரக்கு (சில்லறைக்) கடையினையும், இரண்டு வீடுகளையும் மற்றும் தென்னை மரங்கள் வாழை மரங்கள் முதலானவற்றை உடைத்தும், சேதப்படுத்தியும் உள்ளது. இதனால் கடைக்காரரும், தென்னைச் செய்கையாளர்களும் தாம் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தென்னந் தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் சுமார் 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக தெரிவித்தனர்.

அத்துடன் வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த நெல்லை சாப்பிட்டதுடன் வெளியில் வீசி சேதப்படுத்தியுள்ளது

தென்னை மரங்களை துவம்சம் செய்ததோடு வாழைக்குலைகளை சாப்பிட்டு வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

இரவில் தூங்க முடியாது பயமாக உள்ளதாகவும், யானைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தெரிவிக்கின்றனர்.

# செயலிழந்துள்ள தெரு மின்குமிழ்களை அகற்றி புதிய மின்குமிழ்களை பொருத்தும் செயற்பாடு முன்னெடுப்பு





(பாறுக் ஷிஹான்)

செயலிழந்துள்ள தெரு மின்குமிழ்களை அகற்றி புதிய மின்குமிழ்களை பொருத்துதல் மற்றும் இருளடைந்த பகுதிகளை ஒளிரூட்டுதல் போன்ற செயற்பாடுகளை இரவு பகலாக கல்முனை மாநகர பொது வசதி பிரிவு முன்னெடுத்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு ,மாநகர பகுதிகளில் உள்ள மின்குமிழ்கள் ஒளிராமை குறித்து பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ஆலோசனையின் பிரகாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மேற்படி பகுதிகளில் கடந்த 2 மாதங்களாக பல மின்கம்பங்களில் இணைக்கப்பட்ட மின்குமிழ்கள் செயலிழந்திருந்தன.இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதுடன் திருட்டுச்சம்பவங்கள், விபத்துக்கள் அதிகரித்திருந்தன.

இதனை தொடர்ந்து அதிகளவான மக்கள் பயன்படுத்தும் நற்பிட்டிமுனை தொடக்கம் கல்முனை பகுதி வரையான பகுதிகளில் இரு நாட்களாக செயலிழந்த மின்குமிழ்கள் அகற்றப்பட்டு மாற்றப்பட்டு அப்பகுதிகள் ஒளியூட்டப்பட்டன.

இச்செயற்பாடு காரணமாக இரவு வேளையில் பயணம் செய்யும் மக்கள் அச்சமின்றி பயணங்களை மேற்கொண்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.கல்முனை மாநகர பொது வசதி பிரிவு பொறுப்பதிகாரி ஏ.அமீர் மேற்பார்வையாளர் எம்.எம். பயிஸ் ஆகியோரின் கண்காணிப்பில் இச்செயற்பாடுகள் இரவு பகலாக மேற்குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் பிரதேசத்தில் 5336 சமுர்த்திக் குடும்பங்களுக்கு அரசின் மானியத் தோகைப் பணம் வழங்கி வைப்பு





(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி கிளைப் பிரிவுகளைச் சேர்ந்த 5336 சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களுக்கு சுமார் 35 இலட்சம் ரூபா பணம் அரசின் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகை பணமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் கிராமங்கள் தோரும் இன்று வழங்கி வைக்கப்பட்டு இருந்தன. அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்திற்கு அமைவாக சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களுக்கு அதிகரிக்கப்பட்ட மானிய பணத்தொகை வழங்கும் வேலைத்திட்டம் நேற்று நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கிக் கிளைப் பரிவுகளில் உள்ள சுமார் 5336 சமுர்த்திக் குடும்பங்களுக்கு 35 இலட்சம் ரூபா பணம் பயனாளிகளின் சமுர்த்தி முத்திரைகளின் தொகைகளுக்கு ஏற்ப அதிகரிக்கப்பட்ட பணத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் திருக்கோவில் பிரதேசசபை தவிசாளர் இ.வி.கமலராஜன் சமுர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.






# குறைந்த செலவில் நிறைந்த சேவையை வழங்குவதே எமது இலக்காகும்

## வைத்தியசாலை திறப்புவிழாவில் வைத்தியநிபுணர் றிஷான் ஜெமீல்





**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சைகள் கண் மருத்துவ அறுவை சிகிச்சைகள் பொது அறுவை சிகிச்சைகள்இ எலும்பியல்இ சிறுநீரகம்இ மகளிர் மற்றும் மகப்பேறு அறுவை சிகிச்சைகள் 35 க்கும் மேற்பட்ட சேனலிங் சேவைகள் மற்றும் எங்களிடம் எண்டோஸ்கோபிஇ டிரெட்மில் அழுத்த சோதனை எக்கோ அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் எக்ஸ்ரே வசதிகள் உள்ளன. குறைந்த செலவில் உயர்தர சேவைகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.

இவ்வாறு டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பணிப்பாளரும் தவிசாளருமான உரிமையாளருமான வைத்திய நிபுணர் டாக்டர் றிஷான் ஜமீல் தெரிவித்தார்.

3%வருடகாலமாக கல்முனைக்குடியில் வைத்தியசேவையாற்றிவரும் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கிளை வைத்தியசாலையான டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த சாய்ந்தமருது வைத்தியசாலையின் திறப்பு விழா வெள்ளியன்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவில் பிரதமஅதிதியாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம்.தௌபீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்துவைத்தார்.

இந்த திறப்பு விழா நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல். எம். றிபாஸ் சாய்ந்தமருது வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயசிறில் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.முனீர் ஆகியோர் மேடையில் முன்னிலை அதிதிகளாகக்கலந்து உரையாற்றி சிறப்பித்தார்கள்.

அங்கு டாக்டர் றிஷான்ஜமீல் மேலும் பேசுகையில்:

எனது தந்தையார் டாக்டர் ஏ எல் எம் ஜமீல் அவர்களால் தொடங்கப்பட்ட இவ்வைத்தியசாலை கடந்த 3% ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. செவிலியராக ஆரம்பித்து 10000 க்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுத்தது.

தற்போது புதுப்பிக்கப்பட்டு புதிய அமைப்புகள் மற்றும் பலநவீன சேவைகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் உயர்தர சேவைகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளோம். தற்போது எங்களின் டுளுஊளு செலவு மூலதன விலையில் கிட்டத்தட்ட 1‰3 ஆகும்.

எதிர்காலத்தில் ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சைகள் நுமீவு அறுவை சிகிச்சைகள்இ கேத் லேப் ஊவு ஸ்கேன் வசதிகள் போன்றவற்றை நிறுவ தயாராகி வருகின்றோம். அனைத்திற்கும் மககளின் ஆதரவு ஒத்துழைப்பு மிகவும் தேவை.

நான் உழைப்பதற்காக இதனை நிறுவவில்லை. நானும் எனது குடும்பமும் லண்டனில் வாழ்கிறோம்.கட்டாரில் சேவைசெய்கிறோம். எனக்கு உழைக்கவேண்டுமென்ற தேவை இல்லை. இருந்தும் இன்றைய பொருளாதாரநெருக்கடிமிகுந்த நாட்டுச்சூழ்நிலையிலும் இத்தகையதொரு சேவையினை எமது மக்களுன்னு வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கில்தான் இதனைச்செய்திருக்கிறேன். உண்மையில் இதற்காக இட்ட கோடிக்கணக்கான ருபாக்களை மீளப்பெறுவதானால் குறைந்தது 15வருடங்களுக்கு மேல் செல்லும்.அதனையிட்டு நான்கவலைகொள்ளவில்லை. எமது மக்கள் மட்டக்களப்பு கொழும்பு என்று அலையாமல் அவர்களுக்கான சுகாதாரசேவையினை காலடியில் வழங்கவேண்டும். அதன் விளைவே இது என்றார்.

விழாவில் அரசியல்பிரமுகர்கள் வைத்திய அதிகாரிகள் பிரதேச முக்கியஸ்தர்கள் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை மற்றும் சாய்ந்தமருது வைத்தியசாலைகளின் பொது முகாமையாளர்கள் நிர்வாகிகள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாசிக்குடா கடற்கரையில் உயிர்காக்க பயில்வோம் நீச்சல் பயிற்சி நிகழ்வு







**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

நீரில் மூழ்குவோர்களை காப்பாற்றுவது தொடர்பான நீச்சல் பயிற்சி முகாமின் இறுதிநாள் நிகழ்வு பாசிக்குடா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றது.

கல்குடா ஏ.வி. டைவர்ஸ் மற்றும் கல்குடா அனர்த்த சேவைப் பிரிவு ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சுமார் மூன்று நாட்களாக இடம்பெற்ற இப் பயிற்சி முகாமில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயிற்சிகளை பெற்றனர்.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் அப்துல் மஜீத் ஹலீம், முஹம்மது கபீர் இப்றாஹீம் ஆகியோர் 200 மீற்றர் தூரத்தை 10 நிமிடத்தில் நீந்திக்கடந்து பாராட்டுக்களை பெற்றுள்ளனர்.

அனுபவம் வாய்ந்த Life Saving அணியின் வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்ட இந்த பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட மானியத்தொகை வழங்கிவைப்பு





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு அமைய சமூர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட மானியத்தொகைப் பணத்தினை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (14.02.2022) நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

வங்கி முகாமையாளர் சட்டத்தரணி, எம். எம். முபீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான அதிகரிக்கப்பட்ட மானிய தொகையை சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளித்தார்.

நாவிதன்வெளி சமுர்த்தி வங்கி அலுவலகத்தின் 10 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளுக்கு 50 லட்சம் ரூபா நிதி அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையாக என்று பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச கணக்காளர் றிஸ்வி யஹ்சர், அம்பாறை மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் எம்.எல். அமீர் அலி, வங்கி உதவி முகாமையாளர் எம். எம். நபார், பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ்.சிவம், சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபை தலைவர் பி. பிரசன்னா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்டத்தில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக

## சுவாமி விவேகானந்தர் அறநெறி பாடசாலைக்கான பெயர் பலகை திறை







**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன LRG தோட்ட கீழ்பிரிவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் அறநெறி பாடசாலைக்கான பெயர் பலகை திறைநீக்கமும் அங்கு கல்வி பயிலும் மாணவச் செல்வங்களின் அடிப்படை தேவைக்காகாகட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அடிக்கல்லும் நாட்டிவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர். ரமேஸ்வரன் சபரகமுவ மாகாண தமிழ் மொழி மூல பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி. மனோகரன் மற்றும் நிர்வாக குழுவினர் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

# கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் நூல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு

**( பைஷல் இஸ்மாயில் )**



கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் (14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், கொவிட் 19 தொற்றுக் காலத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் பாரிய பங்களிப்புக்களை மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் செய்திருந்தது. கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் தொற்றினால் பாதிக்கப்படாதவர்கள் என சகல மக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி மற்றும் இமியுன் வூஸ்ட்டர் பானங்களுடன் ஆயுள்வேத மருந்துகளையும் வழங்கி வந்த செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

இதன்போது மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதரினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரனுக்கு வழங்கி வைத்த அதே வேளை நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி பொதிகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், நிருவாக உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.நவந்திரராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பிரதான வீதியில் குடிநீர் குழாய் வெடித்து நீர் வீண்விரையம்: போதுமக்கள் முறைப்பாடு

**( எப்.முபாரக்)**



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர் வழங்கல் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதியில் குடிநீர் குழாய் வெடித்து ஒரு கிழமையாக நீர் ஒடிக்கொண்டிருப்பதாக அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் நகரின் பௌத்த விகாரைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியினூடாக செல்லும் பிரதான குழாய் நீர் வெடித்ததால் குடிநீர் வீண் விரையமாகி வருகின்றது.

குடி நீர் வடிகாண்களில் வடிந்து ஓடிக்கொண்டிருக்கின்றது.இவை தொடர்பாக கந்தளாய் பாவனை அலுவல்கள் பகுதிக்கு அறிவித்தும் எந்த விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கின்றனர்.

எனவே அதிகாரிகள் கூடிய விரைவில் நீர் வீணாகுவதை தடுத்து நிறுத்த வேண்ம் என அப்பகுதி கோரிக்கை விடுக்கின்றனர்.

# பொய் வாழ விடாது உண்மை சாக விடாது

## சுவாமி விவேகானந்த விழாவில் தவிசாளர் ஜெயசிறில்



**( வி.ரி.சகாதேவராஜா)**

'பொய் வாழ விடாது உண்மை சாக விடாது' விவேகானந்தரின் பணியிலே நாமும் பயணிப்போம். என சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது ஜனன தின நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது ஜனன தின நிகழ்வானது, காரைதீவு விவேகானந்த விளையாட்டுக் கழக தலைவர் ச.நேசராசா தலைமையில் கழகத லைமையகத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் விவேகானந்தருடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து விவேகானந்தருடைய கொள்கை தொடர்பான விடயங்கள் மாணவர்களினாலும் அதிதிகளினாலும் பேசப்பட்டது.

அறநெறி மாணவரின் நிகழ்ச்சிகளும் மேடையேறின.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

இ.கி.மிசனை உருவாக்கிய வீரத்துறவி இந்தியாவின் சரித்திரத்தை மாற்றியமைத்தார். சிக்காக்கோவில் இடம்பெற்ற சர்வமதபேரவையில் சுவாமிகளது உரை உலகையே ஒருகணம் திரும்பிப்பார்க்கவைத்தது. இந்துசமயத்தின்பால் பலரையும் ஈர்த்தது. என்றார்.

இந்நிகழ்வில், விவேகானந்தா விளையாட்டு கழகத்தின் செயலாளர் கே.உமாரமணன், வங்கி முகாமையாளர் வி.குலேந்திரன் ,முன்னாள் பிரதேச சபை உப தவிசாளர் கே.தட்சணாமூர்த்தி ,முன்னாள் கழகத் தலைவர் எஸ்.தங்கவடிவேல் ,சிரேஷ்ட உறுப்பினர்களான மு.வரதராஜன், வெ.ஜெயகோபன், எஸ்.ராஜேந்திரன் ,அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

# அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் வழங்கி வைப்பு!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப்பிரகடனத்திற்கு அமைவாக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண தொகையை சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் செங்கலடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரும் ஏறாவூர்ப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் அவர்களால் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், சுயமாக முன் வந்து தாம் பெற்றுவந்த சமுர்த்தி நிவாரணத்தை ஒப்படைத்த சமுர்த்தி பயனாளிகளுக்கு பொற்சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி சிரேஸ்ட முகாமையாளர் ஜே.எப்.மனோகிதராஜ், செங்கலடி பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.இராசலிங்கம், தலைமையக முகாமையாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் பதவி நிலை அரச உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழி சிங்களம் பயிற்சிப்பட்டறை ஆரம்பம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பில் பதவிநிலை அரச உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழி சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுக் கொள்வதற்கான பயிற்சிப்பட்டறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் அரசகரும மொழித் தேர்ச்சிக்கான சிங்கள மொழியினைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப்பட்டறை மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நேற்று(14) மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்பயிற்சி நெறியானது மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், நிறுவாக அலுவலகங்கள், கல்வி திணைக்கள அலுவலகங்கள், விவசாயம், மற்றும் நீர்பாசன திணைக்களங்ளில் கடமைபுரியும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 80 பேருக்கு அரசகருமமொழி சிங்களத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியானது 200 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்களம் மட்டம் 1 இற்கான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதனூடாக அரச உத்தியோகத்தர்கள் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டிய தகைமையாகிய அரசகரும மொழி சிங்களத்தில் தேர்ச்சி பெற்வராகக் கருதப்படுவர்.

அரச கரும மொழித்திணைக்கள மாவட்ட இணைப்பாளர் வீ. சந்திர குமாரின் ஒருங்கிணைப்புடன் இடம்பெறும் இவ்வாரம்ப நிகழ்வில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரசாத் ஆர். ஹேரத், உதவிப் பணிப்பாளர், பஷ்மிலா ரவிராஜ், கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் ரிட்மா லன்சகார, பாட இணைப்பாளர் கல்யானி உட்பட சிங்கள மொழி பயிற்றுவிப்பாளர்களான திரு மாணிக்கவாசகம், திலினி மதுசங்க மற்றும் பயிற்சியாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# நாடு பூராகவும் 75 இலட்சம் மரங்களை நடும் தேசிய வேலைத்திட்டம்





**(ந.குகதர்சன்)**

75 ஆவது சுதந்திர தின பவள விழா நிகழ்வை முன்னிட்டு ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 75 இலட்சம் மரங்களை நடும் தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2023 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட இருக்கின்ற 75 ஆவது சுதந்திர தினத்தினை வெகு விமர்சையாக கொண்டாடும் வகையில் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைவாக நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக இவ்வருடம் பூராவும் பல்வேறு மக்கள் நல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்திற்கான மரநடுகை நிகழ்வு வாகரை பிரதேசத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று இலட்சம் மரங்களை நடும் இந்திட்டத்தினை ஆரம்பிக்கும் நிகழ்வின் பிரதம அதிதியாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த, மேலதிக செயலாளர் ஜே.ஜே. தர்மதிலக உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கோமரங்கடவெல உதவி பிரதேச செயலாளராக எஸ். கமல்ராஜ் நியமனம்



**(எப்.முபாரக்)**

கோமரங்கடவெல உதவி பிரதேச செயலாளராக எஸ். கமல்ராஜ் நியமிக்கப்படுள்ளார். 2021 ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர் கிழக்கு பல்கலைக் கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

# திருமலையின் நீண்ட காலம் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்த பல வீதிகள் புனரமைக்க வேலைகள் முன்னெடுப்பு

**(ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குற்ப்பட்ட பல வீதிகள் புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களின் தலைமையில் இவ் வீதிகள் புனரமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (13) மட்க்கோ பிரதான வீதியில் இடம்பெற்றது.

இவ்வாறு மட்க்கோ பிரதான வீதி ,முஹம்மதியா நகர் வீதி தொடக்கம் புதுக் குடியிருப்பு வீதி வரையிலான 4கிலோ மீட்டர் தூரம் வரை குறித்த வீதிகள் புனரமைக்கப் படவுள்ளதுடன் கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பட்டணமும் சுழலும் பிரதேச சபை உறுப்பினர் ஜெய்னுதீன் துவான் பஹார்டீன் அவர்களின் வேண்டுகோளுக்கினங்க பிரதேச சபையின் தவிசாளர் ஆர்.ஏ.டீ.எஸ்.ரத்நாயக்க அவர்களின் வழிகாட்டலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த வீதிகள் புனரமைப்பிற்காக சுமார் 126,460,605.07 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பிரதேச மக்கள் மற்றும் உள்ளூர் அரசியல் தலைமைகள் இவ் வீதி புனரமைப்பு சம்பந்தமாக பல அரசியல் வாதிகளினால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே அவர்கள் இவ் அபிவிருத்தி வேளையினை ஆரம்பித்து வைப்பது தொடர்பில் தாம் மிக்க நன்றியினை தெரிவித்துக்கொள்வதாகவும் குறித்த வீதியின் நிர்மாணப்பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் ஜெய்னுதீன் துவான் பஹார்டீன் தெரிவித்தார்

மேலும் இந்நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் உதவி பிரதேச செயலாளராக உதயகுமாரன் குமணன் நியமனம்

**(எப்.முபாரக்)**



கந்தளாய் உதவி பிரதேச செயலாளராக உதயகுமாரன் குமணன் நியமிக்கப்படுள்ளார். 2021 ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக் கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கணக்கிடலும் முகாமைத்துவத்தில் ஆரம்ப பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

இவர் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கத்து. நேற்று (14) கந்தளாய் பிரதேச செயலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன் போது கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரியும் உடனிருந்தார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தேவஸ்தானத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கி வைப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் பழனி ஆண்டவர் தேவஸ்தான பரிபாலன சபையினால் வசதி குறைந்த மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு ஆலய பரிபாலனைசபைத் தலைவர் தேசபந்து தேசகீர்த்தி நாகலிங்கம் சசிகரன் தலைமையில் நேற்று (14) ஆலயத்தில் இடம் பெற்றது.

போதனா வைத்தியசாலையில் சுகாதாரத் தொழில் புரியும் ஊழியர்களில், வசதி குறைந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கல்வி கற்கும் 50 மாணவர்களுக்காக இவ்வப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி. கலாரஞ்ஜினி கணேசலிங்கம் பிரதம அதியாகக் கலந்து கொண்டு அப்பியாசக் கொப்பிகளை மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கி வைத்தார்.

இவ்வப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வில் மாவட்ட வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்களான டாக்டர். மைதிலி, டாக்டர், எப்.பீ. மதன், சிரேஸ்ட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர். பீ. ஜீபரா, வெளி நோயர் பிரிவிற்கான சிரேஸ்ட வைத்திய உத்தியோகத்தர் திருமதி. துரைராஜசிங்கம், ஆலய பரிபாலனை சபை ஆலோசகர் வீ. புஸ்பராஜா, செயலாளர் கே. ரஜனிகாந் உட்பட வைத்திய நிபுணர்கள், கணக்காளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.






ௐ
ஸ்ரீ ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம்
சிதானந்த தபோவனம் மட்டக்களப்பு
ஆலய முகப்புக் கோபுர அடிக்கல் நாட்டு விழா
அழைப்பிதழ்
அன்புடையீர்
நிகழும் மங்கலகரமான கலியுகாப்தம்
பிலவ வருடம்
(5123) மாசி மாதம் ஐந்தாம் நாள்
(பொது ஆண்டு 2022-02-17ந் திகதி)
மு.ப 08.03 முதல் 09.33 வரையுள்ள
சுப வேளையில்
மட்டக்களப்பு - கல்முனை
நெடுஞ்சாலையை அண்மித்ததாகவுள்ள
சரவண வீதி சந்திக்கு அருகாமையில்
அமைக்கப்படவுள்ள
ஆலய முகப்புக் கோபுர அழக்கல் நாட்டு விழா
இடம்பெறவுள்ளது.
இந்நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பித்து
முருகப்பெருமானின் அருளினைப் பெறுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.
இவ்வண்ணம், நிர்வாகம்

# கணக்கில்லையா? வாழ்வை இழந்த இளைஞன்

**படுவான் பாலகன்**

உச்சியில் கதிரவன் காட்சி கொடுக்கின்றான். வீதியின் ஓரங்களில் கிறவல் கும்பங்கள் குவிக்கப்பட்டு காணப்படுகின்றன. வீதியால் நடந்து சென்றவர்கள் மரநிழல்களில் களைப்பாறி நிற்கின்றனர். வெப்பத்தின் அளவும் வழமைக்கு மாறாக இருக்கின்றது. ஆடையுடன் ஆற்றில் இறங்கி நனைந்துவிட்டு கரையேறியவர்கள் போன்று மண்வெட்டியுடன் இளைஞர்கள் சிலர் நிற்கின்றனர். கைகட்டி மரநிழலில் நின்றுகொண்டு ஒருவர் அப்படி செய், இப்படி செய் என்று கட்டளையிட்டுக்கொண்டிருக்கின்றார்.

மரநிழலில் இருந்தவர்கள் வாகனங்கள் வீதியால் வருகின்றனவா? என எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு வரும் வாகனங்களுக்கு கை அசைத்து நிறுத்தி அதில் சிலர் ஏறிச்செல்கின்றனர். இவ்வீதியால் பலர் பயணம் செய்தாலும், பொதுபோக்குவரத்துச்சேவை இல்லை. இதனால் பிரதான வீதியில் இறங்கி தங்கள் கிராமங்களுக்கு நடந்தும், வீதியால் வரும் வாகனங்களில் ஏறியும் செல்வர். இது இங்குள்ள மக்களுக்கு பழகிபோனதொன்று.

இவ்வீதியால்தான் சோமு சேரும் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். அப்போது இளைஞர்கள் சிலர் வேலை செய்வதைக் காண்கின்றார். எப்போதும் இளைஞர்களை ஊக்கப்படுத்தி தொடர்ந்து கற்க வைப்பது, தொழில்வழிகாட்டல் பயிற்சிகளில் இணைத்துவிடுவதில் ஈடுபாடு கொண்டவர்தான் சோமுசேர். இவ்விளைஞர்களைக் கண்ணுற்றதும் சோமு சேருக்கு அவர்களிடம் பேச வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

மோட்டார் சைக்கிளில் இறங்கி இளைஞர்களுக்கு அருகில் செல்கின்றார். எல்லோரும் சோமு சேர் வருவதை அவதானிக்காமலேயே தங்களது வேலைகளை செய்து கொண்டிருக்கின்றனர். வேலைகளை செய்யாது பேசிக்கொண்டிருந்தாலும் இவர்களை பார்த்து வேலை சொல்லிக்கொண்டிருக்கும் மேற்பார்வையாளர் சத்தமிட்டுவிடுவார் என்ற அச்சத்தினாலும், மதிய உணவு உண்ணவேண்டும் என்பதற்காகவும் வேகவேகமாக கிறவலை வீதியின் ஓரத்தில் பரவிக்கொண்டிருக்கின்றனர்.

முகத்தில் தாடியும் வளர்த்து, தொப்பியும் அணிந்து கொண்டு, சாம்பல் நிற முழுநீள சேட்டும், றவுசரும்





அணிந்து வேலைசெய்து கொண்டிருந்தான் விமல். சோமு சேரைக் கண்டதும் மறுபக்கமாக முகத்தினை திருப்பிக்கொண்டு, தலையை அதிகமாக குனிந்து வேலை செய்து கொண்டிருக்கின்றான். சோமு சேரும் இளைஞர்களுக்கு அருகில் வருகைதந்து கதைகொடுக்க

மேற்பார்வையாளனும்

வேலையைப் பாருங்க என்று சத்தமிட, நாம் கதை கொடுக்கத்தான் இவன் இப்படி பாயிறான்

என மனதிற்குள் நினைத்துக்கொண்டு சோமு சேரும் தனது மோட்டார் சைக்கிளை நோக்கி செல்கின்றார்.

மதிய சாப்பாடு சாப்பிடும் போது இவர்களுடன் பேசலாம் தானே, பேசித்தான் போக வேண்டும்

என தனக்குள்ளே பேசிக்கொண்டு செல்கின்றார்.

வேலை செய்த விமலும் மெதுவாக திரும்பி பார்க்கின்றான் மோட்டார் சைக்கிளுக்கு அருகில் சோமு சேர் செல்வது தெரிகின்றது.

அப்பாடா, இப்பதான் உயிர் வந்தது போல் இருக்கின்றது. பயந்தே போயிட்டேன், கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை, என்ன செய்வதென்றே தெரியாம இருந்தது.

என பக்கத்தில் இருந்த ராமுவை பார்த்து விமல் கூறினான்.

ஏன் அப்படி சொல்கிறாய் உனக்கு என்ன நடந்தது என விமல் கேட்டான்.

இப்போ இவ்விடத்திற்கு வந்து போனவர் என்னைப் படிப்பித்த ஆசிரியர். எப்போதும் என்னோடு அன்பாக இருப்பார். நண்பராக பழகுவார். படிக்கும் போது எனக்கு நிறைய உதவி செய்வார். எல்லோரையும் சமமாக பார்ப்பார். பாடசாலைக்கு விடுமுறையே எடுக்கமாட்டார். நிறைய வேலைகளை பாடசாலைக்காக செய்திருக்கின்றார். பாடசாலையில் என்ன நிகழ்வு நடந்தாலும் முன்னிற்கு நிற்பார். எப்போதும் பிள்ளைகளின் பக்கம் நின்றுதான் பேசுவார்;.

வகுப்பில் எப்போதும் முதலாம் பிள்ளையாகவே நான் வருவேன். பாடசாலையில் அதிகபெறுபேற்று உயர்தரம் கற்று பல்கலைகழகம் சென்று இந்த ஊரிலே முதல் அரச உத்தியோகம் எடுக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அதனை நிறைவேற்ற வேண்டும் என்பது எங்களது நினைப்பு. அதற்காக எப்போதும் எங்கள் வகுப்பு பிள்ளைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து படிப்போம். எங்களுக்குள் போட்டி போடுவமே தவிர, பொறாமைகள் வந்ததில்லை.

நாங்கள் 10ம் தரம் கற்கும் போது எமது பாடசாலையை விட்டு இடமாற்றம் பெற்று சோமு சேர் போய்விட்டார். அவரை போகவேண்டாம் என பலமுறை கூறினோம். ஆனாலும், அவருக்கு ஏற்பட்ட உடல் வருத்தம் காரணமாக தனது வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலை ஒன்றிற்கே இடமாற்றம் பெற்றுச்சென்றுவிட்டார். அதற்கு பிறகு அவரை நான் கண்டதில்லை. அவரை பார்க்க வேண்டும் என்று நினைத்தாலும் அவரின் விருப்பத்தினை நிறைவேற்றவில்லையே. அப்படி இருக்கும் போது எப்படி அவரின் முகத்தினை பார்ப்பது என்ற உணர்வினால், அவரை பார்க்கவே கூடாதென இருந்துவிட்டேன்.

என்று கூறிய அவனின் கண்களில் இருந்து அவனை அறியாமலே கண்ணீர் வடியதொடங்கியது.

கண்களை கசக்கிக்கொண்டு நிமிர்ந்து பார்க்கின்றான். மோட்டார் சைக்கிளில் சோமு சேர் அமர்ந்துகொண்டிருக்கின்றார். சுறுசுறுப்பாக இயங்கிய விமலின் உடல் சோர்விழந்ததைப் போல் மாறுகின்றது.

மேற்பார்வையாளனும்

சாப்பிட்டுத்து 30 நிமிடத்தில் வேலைக்கு வர வேண்டும் என சத்தமிடுகின்றான்.

இச்சத்தம் சோமு சேரின் காதுகளிலும் விழுகின்றது. வேகவேகமாக மண்வெட்டிகளை மரநிழலில் வைத்துவிட்டு, கைகளைக் கழுவிக்கொண்டு, சைக்கிளின் கூடைகளில் இருந்த உணவுபொதிகளை எடுத்துக்கொண்டு வட்டமாக அமர்ந்து, உணவுப்பொதிகளை அவிழ்கின்றனர்.

வேகமாக சாப்பிட்டுவிட்டு எழவேண்டும்.

சோமு சேர் இவ்விடத்திற்கு வரக்கூடாது. என மனதிற்குள் நினைத்துக்கொண்டு வழமையை விட பதட்டமாகவே சாப்பிட ஆரம்பிக்கின்றான் விமல்.

வழமையாக சாப்பிடும் போது பாதணியையும், தொப்பியையும் கழற்றி உணவுக்கு மரியாதை கொடுத்தே உணவு உண்ணும் விமல். இன்றைக்கு மட்டும் தொப்பியும் கழற்றாமல், மற்றவர்களின் உணவுப்பொதிகளையும் கவனியாமல் உணவு உட்கொள்கின்றான். அப்போது சோமுசேரும் அவ்விடத்திற்கு வந்துவிட்டார். அவ்விடத்தில் அந்த இளைஞர்களுக்கு அருகில் அமர்ந்து, எனக்கும் சாப்பாடு தரமாட்டீங்களா? என கேட்டுக்கொண்டு ஒவ்வொருவர் பற்றியும் அறிய முனைகின்றார். அப்போது விமலைப் பார்த்து,

எல்லோரும் கலகலப்பாகவும், தொப்பியை கழற்றிவிட்டும் உணவு உண்ணுகின்றீர்கள். இந்த பையன் மட்டும் ஏன் தொப்பியுடன் உணவு உண்ணுகின்றான்?.

தொப்பியை கழற்றிவிட்டு உணவு உண்ணு மகன்

எனக்கூற மெதுவாக தொப்பியை கழற்றுகின்றான் விமல். விமலைப்பார்த்ததும் எங்கையோ பார்த்த முகம் என்று யோசிக்கின்றார் சோமுசேர்.

தலையை குனிந்தவனாகவே இருக்கும் விமலைப் பார்த்து தலையை நிமிருமாறு கூறுகின்றார் சோமு சேர்.

இண்டைக்கு மாட்டித்தம் என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு விமலும் நிமிர்கின்றான்.

சோமுசேரும், நீ, விமல்தானே என்கின்றார். ஆம் என தலையை மட்டுமே அசைக்கின்றான்.

நீ பல்கலைக்கழகம் போகவில்லையா? என்கின்றார். இல்லை என்று மட்டுமே பதில் வருகின்றது.

ஏ.எல் படித்த நீதானே? என கேட்க, அதற்கும் இல்லையென்ற பதிலே கிடைக்கின்றது.

ஓ.எல் சித்தியடைந்தா தானே ?? என்று கேட்க, கணிதம் சித்தியடையவில்லை என்கின்றான்.

ஏன்..? என்று கேட்க வந்த சோமு சேர் வாயை மூடி மௌனமாகிவிட்டார்.

என்ன பெறுபேறு என்று கேட்க 5ஏ, 2வீ, 1எஸ் என்கின்றான்.

இப்படி பெறுபேறு எடுத்தும் படிக்கல்லையா? என்று கேட்க அதற்கும் இல்லை என்கிறான்.

அப்போதுதான் அப்பாடசாலையின் ஆளணி தொடர்பில் கல்வி அதிகாரிகளிடம் சண்டையிட்ட ஞாபகங்கள் சோமு சேருக்கு வருகின்றது.

விமல் கற்ற பாடசாலையில் கணிததத்திற்கு ஆசிரியரே இல்லை. ஆரம்ப கணித அறிவும் இல்லாததினால் தெரிந்த ஆசிரியர்கள், தெரிந்ததை சொல்லிக்கொடுத்தாலும் முறையாக பிள்ளைகளுக்கு விளங்குவதில்லை. கலைப்பிரிவு படித்த ஆசிரியர்களே இங்கு கற்பித்தனர். வேறுபாடங்கள் போன்று வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய பாடமும் இல்லை. இப்பாடசாலை அமைந்துள்ள பகுதியில் இருந்து இதுவரை யாரும் பல்கலைக்கழகம் சென்றதுமில்லை. அதற்கு கணிதம்போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாமை முதற்காரணம். கணித ஆசிரியர் ஒருவரை கேட்டுக்கேட்டு பலமுறை நடந்ததுதான் மிச்சம். இப்பாடசாலைப்போன்று இன்னும் சில பாடசாலைகளில் கணித ஆசிரியர் இல்லாமலே இருக்கின்றனர். இப்பிள்ளைகளின் எதிர்காலமும் இப்படித்தானே போகும் என சோமுசேரின் மனதிற்குள் பல கேள்விகளும், சந்தேகங்களும், வெறுப்புணர்வும் எழுந்துகொண்டிருந்தன.

அரச உத்தியோகத்தில் இருக்க வேண்டிய விமல். இன்று கிறவல் பரவும் இளைஞனாக இருக்கின்றானே! என நினைத்து நினைத்து வெதும்பிக்கொண்டிருக்கின்றார் சோமுசேர். இலவசக்கல்வி முறையென்றாலும் ஒழுங்கு முறையாக கிடைக்காமையால், கிராமப்புற பிள்ளைகளின் எதிர்காலம் பாதிப்படைந்துதானே செல்கின்றது. என மனதிற்குள் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து ஆதங்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்.

விமலை தனியார் வகுப்புக்களிலாவது இணைத்து படிப்பித்திருக்கலாம் என நினைத்து, தனது தொழில் சேவைக்கு அர்த்தமில்லையே என நொந்தவராக, விமலுக்கு என்ன கூறுவதென்று தெரியாமலே சோமு சேரும் மௌனம் சாதிக்கின்றார். அப்போது இன்னும் எழும்பவில்லையா? நேரக்கணக்கில்லையா? என்ற சத்தமும் உரத்துக்கேட்டது.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 13

# மூத்த பல்துறைக் கலைஞர் வேலாயுதம் தங்கராசா சாதனை கலைப் பயணம்

**சமூக வளர்ச்சி காலகட்டங்கள் அனைத்தின் ஊடாகவும் கலை இலக்கியம் வளர்ச்சி பெற்று வந்திருப்பதை வரலாற்றினூடாக காணமுடிகின்றது. ஆரம்பகால மனிதர்களிடையே பிற்காலங்களில் வளர்ச்சி பெற்ற கலைகளைக் காணலாம். வேறு மனிதக் குழுக்களிடையே பல அம்சங்கள் கொண்ட ஆரம்ப கலைக்கூறுகள் உருவாகி வளர்ந்து தற்போது காலக் கண்ணாடியாக திகழ்கிறது. இவ்வாறான பழமை மிக்கதும், பெருமை வாய்ந்ததுமான இக்கலையில் பல்வேறுபட்ட துறைகளில் பல திறமை வாய்ந்த பல கலைஞர்கள் உருவாகி வருகின்றனர்.**

அவ் வகையில், திருகோணமலையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், தொன்மை வாய்ந்ததுமான தம்பலகாமம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அமரர். வேலாயுதம் கணேசபாக்கியம் தம்பதிகளுக்கு மகனாக 1945ஆம் ஆண்டு பிறந்தவர் கலைஞர் வே.தங்கராசா ஆவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தம்பலகாமம் மகாவித்தியாலயத்தில் (தற்போது ஆதி கோணேஸ்வர மகாவித்தியாலயம்) கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டதாரியானார். தொடர்ந்து தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் படிப்பை முடித்து முதலாந்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் தகமையுடன், முதலாந்தர அதிபராக 19%5ஆம் ஆண்டு தம்பலகாமம் மகா வித்தியாலயத்தில் கடமை புரிந்து 2005ஆம் ஆண்டு தி/ கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்திலிருந்து அதிபராக ஓய்வு பெற்றார்.

இவரது தந்தையார் தம்பலகாமத்தின் மூத்த எழுத்தாளர் , பல்துறை விற்பன்னர். அவரைப் போன்றே, அவரது பரம்பரையின் கலை வாரிசான இக் கலைஞரும் இளம் வயதிலிருந்தே எழுதுவதில் அதிக ஆர்வம் உள்ளவராக திகழ்ந்தார். இவரின் ஆக்கப்பூர்வமான பல இலக்கியப் படைப்புக்கள் வீரகேசரி, தினக்குரல் , சுடர்ஒளி, மலைமுரசு, மித்திரன் போன்ற




பத்திரிகைகளில் பிரசுரமாகி வெளிவந்துள்ளன.

மேலும் வீரகேசரி , சுடர்ஒளி ஆகிய பத்திரிகைகளில் தம்பலகாமம் பிரதேச நிருபராக பல வருடங்கள் கடமையாற்றியுள்ளார். இவரது ஆக்கங்களில் அவர் எழுதிய 30 சிறுவர் கவிதைகள் தொகுக்கப்பட்டு 'ஆண்டவனைக் கண்டதுண்டா?' எனும் தலைப்பில் கவிதைத் தொகுதியாக 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சில நூல்களையும் படைத்துள்ளார். தான் பிறந்த மண்ணின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்து அவற்றின் சிறப்புக்களை ஆவணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருபவரான இக் கலைஞர் வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோவிலில் மரபுவழி அறக்காவலர்களில் ஒருவராக 'கங்காணம்' எனும் தொழும்பு முறையினைச் செய்து வருகின்றார்.

இவ்வாறான தமிழ்ப் புலமை மிக்க பல துறைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து எழுத்துலகில் தனக்கென்று ஓர் அடையாளத்தை வசீகரித்து , தான் வாழும் பிரதேசத்தினை மையப்படுத்தி அதன் பெருமை மிகு அம்சங்களை உலகறியச் செய்வதற்கு அயராது, சலிக்காது மனமகிழ்வுடன் இலக்கியத்



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்



துறையில் 50 வருடங்களாக ஈடுபட்டு வருபவரான கலாபூஷணம் வேலாயுதம் தங்கராசா கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதிக்காக வழங்கிய செவ்விகாணலை இங்கு காணலாம்.

### ? உங்களது கலைத்துறைப் பிரவேசம் பற்றி?

எனது பாட்டனார் அமரர் கனகசபை பல துறைகளிலும் புலமை மிக்கவர் ஆவார். அவரைப்போலவே அவரது மகனும் எனது தந்தையாருமான அமரர் வேலாயுதம் திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர். சகல துறைகளிலும் வல்லுநராக விளங்கியவர். இவ்வாறான பரம்பரையில் மூன்றாவது தலைமுறையாக தம்பலகாமத்தின் சின்னவர்ணமேடு எனும் கிராமத்தில் உதித்த எனக்கும் இயல்பாகவே சிறுவயதிலிருந்தே கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் அமையப்பெற்றது.

நான் தம்பலகாமம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம். அச்சந்தர்ப்பத்தில் அப் பாடசாலையின் ஆசானும், அதிபருமாகிய சித்திரவேல் அவர்கள் நான் எழுதிய கட்டுரைகளை வாசித்து, பாராட்டி மேலும் எழுதத் தூண்டினார். இதுவே எனது கலைத்துறைப் பிரவேசத்தின் முதற்கட்ட ஆரம்பமாகும். தொடர்ந்து அவரைப் போலவே ஈழத்து எழுத்தாளர் முல்லைமணி, கலாபூஷணம் அருளானந்தம், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் அதிபராக கடமையாற்றிய கருணாகரன் போன்றோர் தமிழ் இலக்கியத்தில் சிறப்பான ஆர்வம் உண்டாவதற்கு என்னை நெறிப்படுத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'சப்பாத்து' என்ற சிறுகதை முதல் இடத்தினைப் பெற்றது. இதன் தொடர்ச்சியாக அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எனது ஆக்க இலக்கியப் படைப்புக்கள் பலவற்றை எழுதி வந்தேன்.

இவ்வாறாக இலக்கியப் படைப்புக்களை தொடர்ந்து நாடகத் துறையிலும் ஈடுபாடு அமையப்பெற்றது. என்



னிடம் நாடகத் துறையிலிருந்த ஆர்வத்தை சீதாலட்சுமி சுப்பிரமணியம், கலாபூஷணம் சோமசுந்தரம், கவிஞர் பத்மநாதன் தம்பிலுவில் கண்ணமுத்து, கமலா, கெங்காம்பிகை போன்றோர்களின் ஊக்கத்தினால் நாடகங்களில் கதாநாயகனாக நடித்து எல்லோராலும் பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டேன். அவ் நாடகங்களில் 'இராஜராஜசோழன்', 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' , 'சாம்ராட் அசோகன்' , 'சோக்கிரட்டீஸ்' போன்றவற்றில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளேன். இவ் நாடகங்கள் திருகோணமலை மாவட்டத்தில் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் பேராசிரியர் மௌனகுரு அவர்களால் நடாத்தப்பட்ட நாடகப்பட்டறைகளிலும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளேன்.

இவ்வாறு கலைத்துறையில் இலக்கியம் , எழுத்து , ஊடகம், சமயப்பணி , சமூகப்பணி போன்ற பல துறைகளில் எனது முழு ஈடுபாட்டையும் அளித்து எனது கலைத்துறைப் பிரவேசமானது அன்று தொடக்கம் இன்று வரை அதன் தாகமும், வேகமும் சிறிதளவில் கூட குறையாமல் வேரூன்றி உள்ளது என்பதை மனமகிழ்வோடு இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

### ? இலக்கியத் துறையில் நீங்கள் படைத்த நூல்கள் பற்றிய விபரங்கள்?

எனது ஆக்கங்களில் நான் எழுதிய 30 சிறுவர் கவிதைகள் தொகுக்கப்பட்டு 'ஆண்டவனைக் கண்டதுண்டா?' எனும் கவிதைத் தொகுதி நூலினை 2006ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளேன். தொடர்ந்து 2008ஆம் ஆண்டு 'இந்திய ஞானிகளின் தெய்வீகச் சிந்தனைகள்' , இலங்கையில் ஸ்ரீ சாயியின் லீலாம்ருதம்' என்ற இரு நூல்களை வெளியிட்டுள்ளதோடு இந் நூல்களின்





தொகுப்பாசிரியராகவும் கடமையாற்றி யுள்ளேன். தொடர்ந்து 2014ஆம் ஆண்டு 'போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள்' எனும் நூலை வெளியிட்டுள்ளேன். தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியம் தொடர்பாக 'ஜீவநதி' வலைத்தளத்தில் (www.geevanathy.com) தொடர்ச்சியாக நான் எழுதிய முப்பத்தொன்று கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலைப் படைத்திருந்தேன். இவ் நூலானது கலைஞர்களின் வாழ்வியலோடு அவர்களின் வாழ்விடங்களின் வரலாறுகளையும் தொகுத்து , எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சிறப்புமிக்க வரலாற்று ஆவணமாக அமைய வேண்டும் என்பதற்காகவே வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### ? நீங்கள் வாழும் தம்பலகாமம் பிரதேசத்தில் இலக்கியத்துறையின் இன்றைய போக்கு பற்றி?

முழுமையாக விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு அன்றாட வாழ்க்கையை நடாத்தும் மக்களாகவே இப் பிரதேசத்து மக்கள் உள்ளனர். எழுத்துத் துறையைப் பொறுத்தவரை ஆர்வம் மிகக் குறைவான நிலையிலே உள்ளது. பாடசாலை மாணவர்களிடத்தில் இலக்கியத்தில் சிறிதளவு ஆர்வம் இருந்தாலும் அவர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கான ஊக்கத்தை அளிப்பதற்கும் , நெறிப்படுத்துவதற்குமான உந்து சக்தியாக எவருமில்லை. எனினும் சிலம்பம் , புகைப்படத்துறை போன்ற கலைத்துறைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் இலக்கியத்துறையின் மீதான இன்றைய போக்கு அசமந்தமாகவேயுள்ளது.

### ? இலக்கியத்துறையில் உங்களது அனுபவம் எவ்வாறு உள்ளது?

அக்காலத்திலிருந்து இக்காலம் வரை சமூகம் மேலோங்குவதற்கும், தனித்துவம் அடைவதற்கும் இலக்கியங்களின் தேவை அதிகமாகவே உள்ளது. அத் தன்மை வாய்ந்த இலக்கியங்களை சரியான, நேர்த்தியான முறையில் நமது பண்பாட்டுக் கோலங்களை பேணி சமூகத்திற்கு தேவையான விடயங்களை நடைமுறையில் அனுசரித்து எழுதி, ஆவணப்படுத்தி மக்களுக்கு கொண்டு சேர்த்து மனத்திருப்தி அடைந்து வருவதே இலக்கியத்துறையின் அனுபவத்தினூடாக நான் கண்டு கொண்ட உண்மையாகும்.

### ? தற்காலத்தில், பாரம்பரிய மரபு ரீதியான கலைகள் மருவிக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து உங்களது கருத்து ?

மிகவும் உண்மையான கருத்து.

எமது தமிழ்ச் சமுதாயத்தின் கவனயீன செயற்பாட்டில்தான் இவ் நிலை ஏற்பட்டுள்ளது. எமது மரபு ரீதியான கலைகள்மருவி அவற்றில் சில கலைகள் நவீனமயமாக்கலுடன் உருவாகியுள்ளது. பல கலைகள் அச் சூழல் சார் இடத்தில் மட்டுமே சார்ந்திருந்து வந்தாலும் பலருக்கும் தெரியாமலே அழிந்து கொண்டு செல்லும் போக்கு காணப்பட்டு வருகிறது. நான் வாழும் தம்பலகாமம் பிரதேசத்திலும் பாரம்பரிய மரபு ரீதியான கலைகள் உள்ளன. இவ்வாறான கலைகளை பேணிப் பாதுகாத்து அதன் தன்மையும், சிறப்பம்சமும் மாறாமல் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கும், அதனை எதிர்கால சந்ததியினருக்கு அளிக்கும் வகையிலும் அவ் கலை சம்பந்தப்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகங்கள் காக்க வேண்டும் என்பதே எனது ஆழ்ந்த கருத்தாகும்.

### ? "கலைகளுக்காகவே தங்களை முழுமையாக அர்ப்பணித்த மூத்த கலைஞர்கள் கால விரயத்தினால் நம் மண்ணில் மறைந்து கிடக்கின்றனர்". இதுகுறித்து மூத்த கலைஞராக நீங்கள் கூற விரும்புவது?

எம் திருகோணமலை மண்ணில் அதிகமான மூத்த கலைஞர்கள் உள்ளனர். அவர்களில் சில கலைஞர்கள் மறைந்து விட்டனர். மற்றைய கலைஞர்கள் முதுமை, நோய் நிலைமை போன்ற காரணங்களால் அவர்களுக்குள்ளே அவர்களது கலைகள் புதைந்து விடுகின்றன. அதுவும் நமது தமிழ்ச் சமுதாயத்தில் அதிகமாகவே இவ் நிலைமையுள்ளது. இதற்கு காரணம் நமது சமூகத்தின் அலட்சியமான போக்கே...

### ? இன்றைய காலத்தில் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

இன்று எழுத்துத் துறையில் இளம் எழுத்தாளர்களின் ஈடுபாடு அதிகமாகவே உள்ளது. மேலும் உங்களை வளப்படுத்திக் கொள்ள நிறைய புத்தகங்களை வாசித்து தமிழ் உச்சரிப்பு, வசனநடை , சந்தஅமைப்பு போன்ற பல உத்திகளை கைக் கொண்டு ஆழமாகவும், திறமாகவும் எழுதி வரவேண்டும். நம் தமிழ்ச் சமுதா

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 13

# மூத்த பல்துறைக் கலைஞர் வேலாயுதம் தங்கராசா சாதனை கலைப் பயணம்

யத்தின் குறைபாடுகளையும் , அசமந்தப் போக்கையும் களைந்து நம் கலாச்சாரத்தைப் பேணக்கூடிய வகையிலும் , சாதி , சமயம் என்பவற்றுக்கு அப்பாற்பட்டு எழுதத் துணியும் போது நம் சமுதாயம் மேம்பட்டு, நம் மண்ணுக்குரிய சிறப்பம்சங்களும் அவ்வாறே அமைந்துவிடும்.

**? கலைத்துறையில் உங்களது குடும்பத்தாரின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது ?**

நிறைவாகவே உள்ளது.

எனது மூத்த மகன் ஜீவராஜ் வைத்தியகலாநிதி. இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே எழுத்திலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனது தந்தையின் ஊக்க தூண்டுதலில் இவர் தற்சமையம் கலைத்துறையிலும் எழுதிக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைத்தது. எமது சமுதாயத்தின் வரலாறுகளையும், பாரம்பரிய சிறப்பம்சங்களையும் கண்டறிந்து ஆவணப் படுத்துவதில், குறிப்பாக தம்பலகாமம் பிரதேசத்தின் அடையாளங்களை வெளிப்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். மேலும் 'ஜீவநதி' (www.geevanathy.com) எனும் வலைத்தளத்தின் ஊடாக தம்பலகாமத்தின் பெருமைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வருகின்றார். இவ்வலைதளத்தில் எனது ஆக்கங்களையும், எனது தந்தையாரின் ஆக்கங்களையும் இணைத்து தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கான அயராத முயற்சியுடன் செயற்பட்டு வருகின்றார்.

அடுத்து எனது மகள் ஜெயகௌரி ஸ்ரீபதி தம்பலகாமத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றி வருகின்றார். தனது கடமைகளுக்கு அப்பால் தம்பலகாமமம் பிரதேசத்தில் மறைந்து கிடக்கின்ற கலைகளையும், அக் கலைஞர்களையும் வெளிக்கொணர்ந்து அவர்களுக்கான அங்கீகாரத்தை சமூகத்தின் மத்தியில் அளித்து வருகின்றார். அது போலவே எனது இளைய மகன் ஜெயகாந்த் ஓர் வைத்தியகலாநிதி. இவர் சங்கீதத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனது மனைவி ஜீவரத்னம் கலைத்துறையில் ஆர்வம் கொண்டவர். அன்று தொடக்கம் இன்றுவரை எனது கலை பயணத்திற்கு உறுதுணையாக இருந்து வருகின்றார் என்பதை இத்தருணத்தில் பெருமையாக கூற விரும்புகின்றேன்.

**? தம்பலகாமம் பிரதேசத்தில் மூத்த கலைஞர்களுக்கான அங்கீகாரம் எவ்வாறு உள்ளது?**

மூத்த கலைஞர்கள் ஓரளவுக்கே பாராட்டப்படுகின்றனர். ஆனால் வேறு பிரதேசங்களை ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே அங்கீகாரம் அமையப் பெற்றுள்ளது. எனினும் தம்பலகாமம் பிரதேச செயலகம் மூத்த கலைஞர்களுக்கான சிறந்த அங்கீகாரம் அளித்து வருகின்றது. இன, மத வேறுபாடு இன்றி மூலைமுடுக்குகளில் வாழும் மூத்த கலைஞர்களை அடையாளப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**? தற்சமையம் எழுத்து இலக்கிய துறை சார் வேலைப்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றீர்களா ?**





ஆம்

ஆறு நூல்களுக்கான எழுத்தாய்வு பணியில் ஈடுபட்டு வருகின்றேன். தம்பலகாம வரலாறும் பண்பாடும், தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோவில் வரலாறும் மரபுகளும், வதனமார் தம்பலகாமம் வந்த வரலாறு, குளக்கோட்டன் எனும் தர்மசீலன், தம்பலகாமம் அருள்மிகு நாயன்மார் ஆலய வரலாறும் மகிமைகளும், இறுதியாக தம்பலகாமத்தின் பாரம்பரிய சிறப்புக்களை மையமாகக் கொண்டு நான் , எனது தந்தை அமரர் க.வேலாயுதம் , எனது மூத்த மகன் த.ஜீவராஜ் ஆகியோரின் தொகுப்பினை சிறுகதையாக வெளியிடவுள்ளேன்.

**? ஒரு பல்துறை கலைஞருக்கு இருக்க வேண்டிய பண்பாக நீங்கள் கருதுவது?**

ஒரு பல்துறைக் கலைஞர் சமூகத்தின் கண்ணாடியாக இருக்க வேண்டும். தனது கலைகள் மூலமாக சமூகத்தை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டும். தமிழ் சமுதாயத்தில் புதைந்து கிடக்கின்ற பல கலைகளை வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்ய வேண்டும்.

**? இத்துறையில் நீங்கள் பெற்ற விருதுகள் , பாராட்டுகள் பற்றி?**

கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியில் 2016ஆம் ஆண்டு நடாத்திய திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டியில் 'இருவரும் ஒருவரானோம்' என்ற கவிதைப் போட்டியில் முதல் இடத்தினை பெற்றேன். நந்தவன பவுண்டேசன் தமிழ்நாடு, அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையால் 2017 இல் நடாத்திய இலக்கிய சந்திப்பில் 'இலக்கியச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டு பெற்றேன். 2015இல் தடாகம் கலை இலக்கிய வட்டம் , கல்வி கலை கலாசார பண்பாட்டு அமைப்பு, கனடா படைப்பாளி உலகமும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணைந்து நடாத்திய இலக்கிய சந்திப்பில் 'கலைத்தீபம்' என்ற விருது வழங்கப் பெற்றேன். 2016 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் நடைபெற்ற இலக்கிய விழாவில் ஆக்க இலக்கியத்துறையில் வித்தகர் விருது, தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவில் வைத்து அதிபராகக் கடமை புரிந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணியினை கௌரவித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கௌரவச் சான்றிதழ் கிடைத்தமை, 2014இல் தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் பிரதேச சாகித்திய விருதும் அதே ஆண்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய விருதான கலாபூஷண விருதும் கிடைக்கப் பெற்றது.



**? நிறைவாக கலைகளுக்காகவே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் சமுதாயத்திற்கு கூற விரும்புவது ?**

எமது தமிழ்ச் சமூகம் நிறைந்த கலைகள் கொண்ட சமூகமாகும். கலைகள் தெய்வீக உணர்வு வாய்ந்தவை. அவ்வாறான கலைகளைக் கொண்ட சிறந்த கலைஞர்கள் அக் கலையினை கலையார்வமிக்க அனைவருக்கும் கற்றுக் கொடுத்து பரவலாக பரப்ப வேண்டும். நமது பாரம்பரிய பண்பாட்டை கொண்ட தரமான கருத்துக்களுடன் புத்தகங்களை எழுதி வெளியிட வேண்டும். அழிந்து கொண்டு செல்லும் கலைகளை இளங் கலைஞர்கள் தங்களது எழுத்துத் திறமையால் போராடி ஜெயிக்க வேண்டும். வருங்காலத்தினர் அறியும் வகையில் ஆவணமாக்கல் துறையில் ஈடுபட வேண்டும். இதற்கு தமிழ்ச் சமூகத்தின் மூத்த , இளம் கலைஞர்கள், ஆசிரியர்கள் , சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், தமிழ் அரசியல்வாதிகள் கவனத்தில் எடுத்து கரம் கோர்க்க வேண்டும் எனக் கூறிக்கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

கலைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த கலைஞர்கள் எண்ணிலடங்காதவர்கள். அவ்வாறான கலைஞர்களில் பல்துறைக் கலைஞராகத் திகழ்ந்து வரும் இக் கலைஞரும் திருகோணமலை மண்ணையும் , குறிப்பாக தம்பலகாம பிரதேசத்தினை முதன்மைப் படுத்தி பல்வேறுபட்ட இலக்கியத் தொகுப்புக்களை எழுதி வெளியீடு செய்து வருகின்றார். நமது தமிழ்ச் சமுதாயத்தில் தளர்ந்துபோன கலைகளை தனது கூர்மையான, ஆழமான சிந்தனைமிகு எழுத்துத் திறமையால் எழுதி தன் பிரதேசத்திற்கும், நம் திருகோணமலை மண்ணுக்கும், நம் நாட்டுக்கும் பெருமை சேர்த்து வருகிறார். தலைமுறை தலைமுறையாக கலைக்காகவே சேவையாற்றி வருவதோடு நம் தமிழ்ச் சமூகத்தில் மறைந்து கிடக்கின்ற பல அரிய பொக்கிஷங்களை இவர் பரம்பரையே வெளிக்கொணர்ந்து, ஆவணமாக்கி புகழடையச் செய்து வருகின்றனர். இவ்வாறான பெருமை மிகுந்த தலைமுறை ரீதியான கலைகள் தொடர்ந்தும் தலைமுறை தலைமுறையாக வளர்ந்து பயணித்து தொடர்ச்சியாக நம் நாட்டிற்கு கலைச்சேவையாற்றி உலகறியச் செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

அந்த வகையில் மூத்த பல்துறை கலைஞரான இவர் மென்மேலும் எழுத்து இலக்கியத்துறையில் பல படைப்புக்களை படைத்து கலைச்சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

**தொடரும்.....
கலைஞர்களுக்கான
தேடலின் பயணத்தோடு**

